உச்சிப்படிப்பு

அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரமம்

அறிவு • பொய்யாமை • சமதர்மம் • ஆன்மீகம் • ஈகை

அய்யா துணை

மருந்துவாழ்மலை

உச்சிப்படிப்பு

(உயர்ந்த படிப்பு)

அய்யா வைகுண்டநாதர் அருளியது

கருத்துரை : ப. சுந்தரம் சுவாமிகள், விராலிகுகை,
மருந்துவாழ்மலை.

தமிழாக்கம்: வேங்கோடு ஞா. துசை,
மு. சிவராமகிருஷ்ணன்.

அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரமம்
மருந்துவாழ்மலை, வைகுண்டபதி, பொற்றையடி, P.O.,
கன்னியாகுமரி மாவட்டம் - 629 703.

அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரமம்
மருந்துவாழ்மலை - 629 703.

சமர்ப்பணம்

அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரம ஸ்தாபகர்களில் முதன்மை பங்கு வகித்து, 38- ம் வயதில் பரகதியடைந்த டாக்டர். கா. நடராஜலிங்கம், எம்.எஸ்.ஸி., பி.எச்.டி.; விரிவுரையாளர், ஆர்.கெ.எம். விவேகானந்தா கல்லூரி, மைலாப்பூர், சென்னை - 4 அவர்களின் நினைவு சின்னமாக, அய்யா வைகுண்டநாதர் அருளிய ''உச்சிப்படிப்பின்'' கருத்துரை விளக்க நூலை, மருந்து வாழ்மலை, அய்யா வைகுண்டநாதர் சித்தாஸ்ரமம், அன்புடன் பணிந்து சமர்ப்பிக்கின்றது.

அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரம
வெளியீடு எண்- 1

நூலின் பெயர் - உச்சிப்படிப்பு

பொருள் - ஆன்மீகம்

ஆசிரியர் - அய்யா வைகுண்டநாதர்

கருத்துரை - ப. சுந்தரம் சுவாமிகள், விராலிகுகை, மருந்துவாழ்மலை.

தமிழாக்கம் - வேங்கோடு ஞா. சூசை, மு. சிவராமகிருஷ்ணன்.

அச்சிட்டோர் - பிரின்ட் பாய்ன்ட் ஆப்செட், நாகர்கோவில் - 629 001.

பதிப்பு - முதற்பதிப்பு -மாசி 1172 -(மார்ச் 97)

பிரதிகள் - 2000

விலை - ரூ.10/-

வெளியிட்டோர் & பதிப்புரிமை - அய்யாவைகுண்டநாதர் சித்தஆஸ்ரமம்,
மருந்துவாழ்மலை,
வைகுண்டபதி,
பொற்றையடி P.O
கன்னியாகுமரி - 629 703.

அய்யா துணை

பால. பிரஜாபதி அடிகள்,
'அன்புவனம்'
சுவாமித்தோப்பு - 629 704.

அன்புடையீர்!

வணக்கம் - வாழ்த்துக்கள்!

அய்யா வைகுண்டநாதர் திருவாய் மலர்ந்து அருளிய "உச்சிப்படிப்பு" எனும் நூலின் கருத்துரை விளக்கத்தை ப. சுந்தரம் சுவாமிகள் எழுதி வெளிக்கொண்டு வருவது அறிந்து மிக்க மகிழ்ச்சி.

ஒரு பொருளை பார்க்கும் பார்வையில் அதே பொருள் பலவகையில் பரிணமிக்கிறது. செக்கும் சிவலிங்கமும் மனிதர்களுக்கு வேறு வேறு. ஆனால் மிருகங்களுக்கு இரண்டும் ஒன்றே.

பொன்னால் செய்த சிறுதேர் சிறுவனுக்கு விளையாட்டுப் பொருள், உரியவனுக்கு செல்வம், கலைஞனுக்கு கலைப்படைப்பு, திருடனுக்கு திரவியம், ஞானிக்கு சாதாரணம்.

கல் கண்டால் நாய் இல்லை, நாய் கண்டால் கல் இல்லை. இரண்டும் உண்டு, இரண்டும் இல்லை. பார்வையின் பரிணாமம்.

அய்யா, பௌதீக, தெய்வீக இணைப்புக்கே வழிகாட்டியுள்ளார். மனிதனை தெய்வமாக்க, கலியுகத்தை தருமயுகமாக்க அறிவு தந்துள்ளார். எனவே அனைத்தும் இருசாரார் சார்புடையதே.

சாதாரண பார்வையில் உச்சிப்படிப்பை பார்த்து சாதாரண மக்கள் தங்கள் சாதனைக்கு பொருத்தமாக பாவித்து வருகின்றனர். அதே வேளை ஞானிகள் ஞானப்பார்வை பார்ப்பதில் தவறில்லை. ஆனால் அதுதான் சரி, இது தான் சரி என்பதும் சரி அல்ல. இரண்டும் சரியேதான்.

தத்துவப்பார்வையில் சுந்தரம் சுவாமிகள் வெளிப்

படுத்தியுள்ள பாங்கு பாராட்டுக்குரியதே, தேவையானதே. தத்துவ நோக்கர்களுக்கும் அய்யாவின் ''உச்சிப்படிப்பு'' தத்துவ தாகம் தணிக்கும் ஆற்றல் உடையதே என்பதை புரிந்து கொள்ள வகை செய்துள்ளது.

நூலை தமிழாக்கம் செய்துள்ள திரு. ஞா. தூசை, திரு. மு. சிவராமகிருஷ்ணன் ஆகியோர்களுக்கும், நூல் வெளிவர காரணமாக உழைக்கும் திரு. K. பொன்னுமணி அவர்களுக்கும், அய்யா வைகுண்ட நாதர் சித்த ஆஸ்ரமத்தார்க்கும் அடியேனது நன்றி கலந்த வாழ்த்துக்கள். நூலை படித்து பயன்பெறும் அனைவருக்கும் அய்யா அருள் நலம் பயக்க அவரடி பணிந்து வேண்டி வாழ்த்துகிறோம். நன்றி!

'வாழ்க நலமுடன் அன்பாய் என்றும்'

அன்பன்
பாலபிரஜாபதி அடிகள்

''உடற்கூறு சத்தி உயிரோ டுதித்து வந்த
சடக்கூறு மூலச் சட்டமது கொண்டவரோ
கல்விக் குகந்தவரோ கருணாகர ரானவரோ
செல்விக் குகந்த சென்மமது கொண்டவரோ
தேவர்க்கும் வானவர்க்கும் திருப்பதிக ளானதற்கும்
மூவர்க்கு முதவிசெய்ய உதித்துவந்த கற்பகமோ''

- அகிலத்திரட்டு அம்மானை

அய்யா துணை

பதிப்புரை

அய்யா வைகுண்டநாதர் அருளிய ‘‘உச்சிப்படிப்பு’’ எனும் அஷ்டாங்க யோகமந்திரத்தின் உட்பொருளினை மருந்துவாழ்மலை ‘அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரம’உத்தமகுருவான விராலி குகை ப.சுந்தரம் சுவாமிகள் தன்னுடைய ஆழ்ந்த ஞானம், அனுபவ அறிவு இவற்றின் மூலம், சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில், ‘‘அய்யா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்’’ அய்யா வைகுண்டநாதர் அருளிய ‘‘தர்மபதி’’ காணும் சாதக முறையை மலையாளத்தில் அழகாக விளக்கியுள்ளதை, வேங்கோடு திரு.தூசை அவர்களும், திரு. M. சிவராமகிருஷ்ணன்,M.A.,B.Ed., அவர்களும் அழகு தமிழில் அள்ளித்தந்து உள்ளார்கள்.

இப்பிரபஞ்சத்தின் ஆதாரமே ‘‘ஓம்’’ எனும் ஓங்கார ஒலி அதிரலையே. அய்யா வைகுண்டநாதர் உச்சிப்படிப்பினை உச்சரிப்பதற்காக அருளியுள்ள இனிய நாதத்தில் உண்டாகும் ஒலியின் அதிர்ச்சி, நாடி நரம்பின் மூலமாக உடம்பின் எல்லா பகுதிகளுக்கும் சென்று, நம்முடைய உணர்வு, சிந்தனை அனைத்தையும் சீராக்கி, செவிக்கு பதம் ஏற்றி, உயிருக்கு ஒளி பாய்ச்சி நம்முடைய உடம்பை தேஜஸ் ஆக்குகின்றது. இதைப்போல் இவ்அகிலத்திலும்(அண்டத்திலும்) ‘அமைதி யான, ஆரோக்கியமான, ஆனந்தமான’ சுற்றுப்புறச்சூழலையும் உருவாக்குகின்றது.

இதனை ப.சுந்தரம் சுவாமிகள் அவர்களின் கருத்துரைகள் மூலமாக நன்கு உணர்ந்து

‘தினம் ஒரு நேர மென்றன் திருமொழி யதனைக் கேட்டால்
பனிவெள்ளம் போலே பாவம் பறந்திடும் நிசமே சொன்னோம்’’

என்ற அகிலத் திரட்டு அம்மானை வரிகளுக்கேற்ப, ‘உச்சிப்படிப்பு’ எனும் இந்த உயர்ந்த புத்தகத்தை படித்து, அய்யா வைகுண்ட நாதர் சித்த ஆஸ்ரமத்தின் அடிப்படை நோக்கமான, ஞானமார்க்கத்தின் மூலமாக யோகீஸ்வரர்

ஆவதற்குரிய நெறிமுறைகளை, அய்யாவின் அருள் மொழிகளின் மூலமாக விளக்குவது என்ற அடிப்படை நோக்கமானது, இப்பதிப்பின் மூலம் பாரெல்லாம் விளங்க, அய்யா வைகுண்டநாதரின் பாதகமலம் தொட்டு தொழுது நிற்கின்றோம்.

அய்யா உண்டு.

மருந்துவாழ்மலை,
மாசி 29-1172
12-3-1997

அய்யா வைகுண்டநாதர்
சித்தஆஸ்ரமம்

“உன்னிலும் பெரியோனாக ஒருவனுள் உயர்த்திக் கண்டால் தன்னிலும் பெரியோனாகத் தழைத்தினி திருந்து வாழ்வீர்”

- அகிலத்திரட்டு அம்மானை

“பக்தியுள்ள மக்களுக்கும் புத்தியுள்ள மக்களுக்கும் பயங்கள் தெளித்துவைப்பேன் பதறாதே என் மகனே”

- பத்திரம்

“நீபெரிது நான் பெரிது நிச்சயங்கள்
பார்ப்போமென்று
வான்பெரிதென்றறியாமல் மாள்வார்
வீண்வேதமுள்ளோர்”

- அகிலத்திரட்டு அம்மானை

அய்யா துணை

அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரமம்

மருந்துவாழ்மலை

அய்யா வைகுண்டநாதரின் அருளால்

**"வடக்கு வெளிவாசல் மலைமீதி லொருபுதுமை,
உண்டாகு மென்மகனே உனக்கு நற்காலமதே"**

என்ற அகிலத்திரட்டு அம்மானை வரிகளை மெய்ப்பிக்க, மருந்துவாழ்மலையில் முளைத்துள்ளதே **'அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரமம்'**

அய்யாவின் அருளால், மருந்துவாழ்மலை கேசவன்தியாகி அவர்களால் கூறப்பட்டு, **"நாம் தேடா முன்னம் நமைத்தேடி வருகின்றான் குரு"** என்ற வள்ளலாரின் வாக்குப்படி 18- 10- 1995 புதன்கிழமை விராலி குகையில் ப. சுந்தரம் சுவாமிகள் அவர்களை சந்தித்த அன்றே, உத்தமகுருவாக ஏற்றுக்கொண்டுள்ளதே அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரமம்.

அய்யா வைகுண்டநாதர் அருளிய **"அருள்நூல்"**, **"அகிலத்திரட்டு அம்மானை"** இவைகளைப் படித்து தெளிவடைந்து

"தாழக்கிடப்பாரை தற்காப்பதே தர்மம்"

"உலகத்தோரே ஒரு நினைவால் வாழுவீர்" என்ற அய்யாவின் உத்தம தத்துவங்களின் அடிப்படையில் **"அன்பு, அறிவு, பொய்யாமை, சமதர்மம், ஆன்மீகம்"** ஆகிய ஐம்பெரும் நற்செல்வங்களும் அண்டமெலாம் இழையோடி **"தர்மயுகம்"** படைப்பதுவும், அய்யாவின் இறுதி அருள்மொழியான **"உடற்குள் குறியாய் ஒத்துமிக வாழுமென்ற"** காரண மூலமந்திரத்தின் அடிப்படையில் இப்பிண்டத்தில் **"தர்மபதி"** காண்பதுவும் ஆஸ்ரமத்தின் அடிப்படை நோக்கமாகும்.

"நாடுதன்னில் மழை தழைத்துப் பெய்யாமல் வானம்

சுருங்கிவிடும்'' என்ற அய்யாவின் சுற்றுப்புறச்சூழல் தீர்க்கதரிசனத்தை அகிலத்திற்கு அறிவித்து, 'அமைதியான, ஆரோக்கியமான, ஆனந்தமான' அகிலத்தை அமைத்தல்.

''மலையடி வாரம் வளருமொரு விருச்சம்
அலையி லும்பெரியதாய் அது தழையுங் கண்டாயே'' என்ற அகில வரிகளை ஆக்கமுடையதாக்கவும்,

''ஏழு பெண்கள் கதையை எடுத்துச்சொல்ல நாளாச்சே
பப்புச்செடிக்குள்ளிருந்து பாம்பு படம்விரித்து ஆடுதடா
ஈரேழு உலகமுண்டு இதையெடுத்துச்
சொல்வார் யார்மகனே!''

என்ற சிவகாண்ட அதிகாரப்பத்திர வரிகளுக்கு, ஞானக்குரல் கொடுக்கவும், அய்யா வைகுண்டநாதரின் அருளினை வேண்டி அடிபணிந்து வணங்கி நிற்கின்றோம்.

அய்யா உண்டு.

C.A. இராஜகுஞ்சரம், M.A., B.L.
(தலைவர்)

K. பொன்னுமணி, M.Sc.
(செயலாளர்)

K. சங்கரபாண்டியன், B.A.,
(பொருளாளர்)

அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரமம்,
மருந்துவாழ்மலை - 629 703.

''மெய்யை நிலைநிறுத்திப் பொய்யை அடியழிக்க விடை தந்தனுப்பினாயே சிவனே அய்யா!''

- சாட்டு நீட்டோலை

அய்யா துணை

அய்யா வைகுண்டநாதர்

(அய்யா நாராயணர்)

அய்யா வைகுண்டநாதரின் திருஅவதாரம் கலியை அழித்து **"தர்மயுகம்"** படைப்பதுவும், **"தர்மபதி"** காண்பதுவும் ஆகும். கொல்லம் வருடம் 984ல், மாசி மாதம் 21ம் தியதி (02-03-1808) புதன்கிழமை அசுவதி நட்சத்திரம், கும்ப லக்கனம், கும்பராசியில் முக்கால ஞானியும், யுகபுருஷனுமாகிய அய்யா வைகுண்டநாதர் மனித குலத்திற்காக அவதரித்தார். பிதா பொன்னுநாடார், மாதா வெயிலாளம்மை. முடிசூடும் பெருமாள் என நாமகரணம் சூட்டப் பட்டு, முத்துக்குட்டி எனும் பெயருடன் வளர்ந்து வந்தார். பதினாறு கலைகளும் பொருந்தப்பெற்று, ராஜகலையுடன் விளங்கினார்.

"சின்னஞ்சிறு மதலையாகத் தோப்பதிலே தவசியிருந்தேன்" என்ற திங்கள்பத வரியால், அய்யா வைகுண்டநாதர் குழந்தைப் பருவத்திலேயே தவம் மேற்கொண்டிருந்தார் என்பதை அறிவதோடு, **"நாரணம் வைகுண்டமாகி"** என்ற அகில வார்த்தைகளின் உண்மை நிலையையும் உணரலாம். இளமையிலேயே அய்யா தவம் மேற்கொண்டதால் தான் அவருடைய சரீரம் தேஜஸ் உற்று விளங்கியது. தீயவர்கள் சிலர் அய்யா வைகுண்டநாதரை அவருடைய 16 வது வயதில், மருந்துவாழ்மலை பரமார்த்தலிங்கேஸ்வரர் சிவன்கோயில் முன்பு வரவழைத்து ஆலகால விடம் கலந்த உணவு பதார்த்தங்களைக் கொடுத்தபோது, அய்யாவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. காரணம் அய்யாவின் இளமைக்கால தவத்தினால் உடம்பு தேஜஸ்உற்று **"சிவலிங்கம்"** ஆகியிருந்ததாகும். அய்யா அவருடைய இளமைப் பருவத்தில் சிறிது காலம் ரோகியைப்போல் வாழ்ந்தார். 'யோகி', 'ரோகி'யைப்போல் வாழ்வார் என்பது பிரகிருதி நியமம்.

அய்யா வைகுண்டநாதருக்கு அவருடைய 24ம் வயதில், கொல்லம் 1008 மாசி மாதத்தில் திருச்செந்தூர் கடலின் உள்ளில் இருந்து ஞானோதயம் சித்தமாயிற்று. இதுவே "விஞ்சை,

நிர்விகல்பசமாதி, ஜீவபிரம்மாவஸ்தை, ஜீவபிரம்ம ஐக்கியம், போதோதயம், ஞானோதயம்'' எனும் பல நாமங்களால் அழைக்கப்படுகின்றது. இந்நிலைகூட வெறும் பௌதீகமே. அதாவது வைஷ்ணவம். விஞ்சை பெற்றது முதல் அய்யா நாராயணர் எனவும், அய்யா வைகுண்டநாதர் எனவும் அழைக்கப்பட்டு வந்தார்.

அய்யா வைகுண்டநாதர் ஞானோதயத்திற்குபின் ஆறு ஆண்டுகள் சுவாமித்தோப்பில் வடக்கு வாசலிலும், மருந்துவாழ்மலையிலும் தவம் மேற்கொண்டு, **'விதேகமுக்தா வஸ்தை'** (வரிஷ்டபதவி) அடைந்து **"அய்யா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்''** ஆனார். இந்திலையே **'சிவலயம்'** எனப்படும். சிவலயத்திற்கு பின் துரிய நிலையடைந்தார். துரியத்திலிருந்து, துரியாதீதம் அடைந்தார். இவ்வாறாக **'துரிய ஜாக்கிரத்'** நிலையிலிருந்து அருளியவையே **"அருள்நூலும்''**, **"அகிலத்திரட்டு அம்மானை"**யுமாகும். அகிலத்திரட்டு அம்மானை அய்யா வைகுண்டநாதரின் அனுக்கிரகம் பெற்ற சீடர் அரிகோபாலன் அவர்களால் கொல்லம் 1016, கார்த்திகை மாதம் 27ம் தியதி எழுத ஆரம்பிக்கப்பட்டதாகும்.

அய்யா வைகுண்டநாதர் விஞ்சை பெற்றபின் அம்மாவின் துக்கத்தை அகற்றுவதற்கு சில சித்திகள் காட்டியதல்லாது மற்று ஒரு போதும் சித்திகள் காட்டியதில்லை. ஞானயோகிகள் ஒரு போதும் சித்திக் காட்டுவதுமில்லை.

"தாய் கிழவிக்குக் கொஞ்சம் அதிசயங்களைக் காட்டி சத்தியமும் கொண்டேனையோ ! சிவனே அய்யா!" என்ற சாட்டு நீட்டோலை வரிகள் மூலம் இதனை உணரலாம். அய்யா, மாதா, பிதாவை போற்றியதல்லாது அவர்களை அவமானப்படுத்தவோ, கீழ்படியாமலிருக்கவோ இல்லை.

'சமாதி' என்பது இறந்தபின் நிலத்தில் புதைத்து வைப்பது அல்ல. ஜீவித்திருக்கும்போதே மனிதன் சமாதி ஸ்தனாக இருக்க வேண்டும். அய்யா மேற்கொண்ட ஆறு வருட கடுந்தவத்தால் **'விதேகமுக்தா நிலை'** (வரிஷ்டபதவி) அடைந்தார். புராணங்களில் அவருக்கு இணையாக காணப்படுபவர்

ஜனகமஹாராராஜாவாகும். ஞானயோகிகட்கு மட்டும் சித்திக்கின்ற உயர்ந்த பதவிதான் 'சமாதி' நிலையாகும். ஞானயோகியானவர் நோயால் இறந்து போவதோ, மனிதர்களாலோ, மிருகத்தாலோ வேறு யாது வழிகளிலும் கொல்லப்படவோ முடியாது. அய்யா, மருந்துவாழ்மலையில் தவம் மேற்கொண்டிருந்த காலகட்டத்தில், ஓர் உத்தமசமாதியை தீர்க்கதரிசனம் மூலம் கண்டு, அவ்விடத்தில் **"வைகுண்டபதியை"** ஸ்தாபித்தார்.

"சாதியான கொடிப்பாம்பு சதிசெய்யும் பாம்பதுதான்"
"இனவாதை பிடித்ததுண்டால் இருப்பீர்களோ இவ்வுலகில்"

- சிவகாண்ட அதிகார பத்திரம்

"நாட்டு முறையைப் போல் காசியும் காணிக்கையும்
நான் வேண்டி தின்னதுண்டோ சிவனே அய்யா!"

- சாட்டு நீட்டோலை

"காணிக்கை யிடாதுங்கோ காவடி தூக்காதுங்கோ"

- அகிலத்திரட்டு அம்மானை

"ஆடு கிடாய் கோழி பன்றி ஆயனுக்கு வேண்டாங்காண்
மேளதாளம் குரவைதொனி வேண்டாம்கா ணீசனுக்கு
ஒரு அன்பு மலரெடுத்து அனுதினமும் பூசை செய்வாய்"

- சிவகாண்ட அதிகாரப்பத்திரம்

மேற்குறிப்பிட்டுள்ள வரிகளிலிருந்து ஜாதிக்கொடுமைக் கெதிரான அய்யாவின் கடும் உணர்வு, காணிக்கை பிரிப்பது, தெய்வங்களுக்கு ஆடு, கோழி, பன்றி இவற்றை பலியிடுவது, மேள தாளம் போன்ற பூஜாவிதிகள் இவற்றிற்கெதிரான உணர்வையும் உணரலாம்.

அய்யா வைகுண்டநாதர் அன்றைய ஜாதிமதக் கொடுமைகளை எதிர்த்துப் போராடினார். திருமூலர், திருவள்ளுவர் போன்ற மஹாசித்தர்களின் பின்பு சாதிக்கொடுமை, சமூக அநாகரீகம் இவைகளைக் கண்டு மனம் வெதும்பி, குரல் கொடுத்தவர் அய்யா வைகுண்டநாதர் ஒருவரே. ஜாதி ஒன்றுதான் உள்ளது, அதில் மனிதர்களெல்லாம்

சமமானவர்கள் எனவும், உலகம் ஒன்றுதான் உள்ளது. அதில் குலமும் ஒன்றே எனவும், மதமும் ஒன்றுதான் உள்ளது அது 'சனாதனதர்மம்' (சமதர்மம்) எனவும், அய்யா மனிதர்கட்கு உபதேசித்தார். அய்யாவின் குறிக்கோள் "ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு உலகம், ஒரு தெய்வம்" என்பதாகும். இவை மிக விரைவில் நிறைவேறப்போகின்றது.

அய்யா வைகுண்டநாதரை விஷம் கொடுத்தும், சிறையிலடைத்தும், அறையில் அடைத்து மிளகாய் போட்டு எரித்து துன்புறுத்தியும், நீற்றிய சுண்ணாம்பில் போட்டும், எரியும் நெருப்பிலிட்டும், கொடிய புலிக்கூண்டில் அடைத்தும், பல வழிகளில் கொல்வதற்கு சுவாதித்திருநாள் அரசரும், அவரது அரக்கபடைகளும், தீயவர்களும் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோற்று வீணாயின. அதிர்ச்சியுற்ற மன்னன் சுவாதித்திருநாள் மனநோயும், சரீரபீடையும் ஏற்பட்டு ரோகியானார். கல்லன்சாகிப் மூலம் பிரகிருதி மன்னனை தண்டித்தது. கி.பி. 1846, டிசம்பர் மாதத்தில் ஊழ்வினை மன்னனை அழைத்துச் சென்றது. இவை திருவிதாங்கூர் வரலாற்றுக் குறிப்பில் இருக்கின்றது. ஆனால், அய்யா வைகுண்டநாதரைப் பற்றிய செய்திகள் வரலாற்றுக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

அய்யா வைகுண்டநாதர் தன்னுடைய 22வது வயது காலகட்டத்தில், ரோகியாக இருந்தது, யோகி, ரோகியைப் போன்று இருக்கவேண்டும் எனும் பிரகிருதி நியமத்தை, பிரகிருதி தானாகவே நிறைவேற்றி கொடுத்த நன்மையாகும். இதுபோன்றே அய்யா வைகுண்டநாதரின் சித்திரமோ, உருவப்படமோ கிடைக்காததுவும், பிரகிருதி தானாகவே நிறைவேற்றி கொடுத்த நன்மையாகும். இவ்வாறு கிடைத்திருந்தால் இன்று அய்யாவும் முச்சந்தியில் தெய்வமாக நின்றிருப்பார். 'நீயே நான்', 'நானே நீ' என்னும் சாமவேத தத்துவத்தில் மூழ்கியதாலேயே இவ் உன்னத நிலையை அடைந்தார்.

'விதேகமுக்தாவஸ்தை' நிலை எய்திய மகத்துகட்கு

பெண்ணாசை என்பது மட்டுமல்ல, எவ்வித ஆசைகளும் உண்டாவதில்லை. இல்லறத்தில் ஈடுபடும் மகத்துகட்கு, ஞானம் பெற்று ஜோதியுடன் கலக்கமுடியுமே தவிர, 'ஜீவசமாதி' அடைய சாத்தியம் இல்லை. இதிலிருந்து அய்யா இல்லறத்தில் ஈடுபடவில்லை என்பது தெளிவாகின்றது. ஞானயோகம் இளமைப் பருவத்திலேயே அடைந்திட வேண்டும். அவர்களே யோகீஸ்வரர்கள். இவ்வித மகத்துவம் கோடான கோடி மனிதர்களில் ஒருவர்க்கே கிடைக்கும். அதுவே பரம உன்னத நிலையாகும். அதை அடைந்தவரே அய்யா வைகுண்டநாதர்.

அய்யா வைகுண்டநாதருக்கு பஞ்சபாண்டவ சீடர்கள் ஐவர் இருந்தனர். மயிலாடி திரு, சிவனாண்டி தர்மசீடராகவும், கைலாசபுரம் திரு. பண்டாரம் பீமன் சீடராகவும், பிள்ளையார்குடியிருப்பை சார்ந்தவர் அர்ச்சுனன் சீடராகவும், குளச்சல் திரு. சுப்பையா நகுலன் சீடராகவும், தென் தாமரைகுளம் திரு. அரிகோபாலன் சகாதேவன் சீடராகவும் இருந்தனர். இவர்கள் தவிர வெள்ளைச் சுவாமிகள், தைக்காட்டு அய்யாகுரு, ஸ்ரீசண்முகவடிவேல் சுவாமிகள் ஆகியோரும் அய்யாவிடமிருந்து ஞானோபதேசம் பெற்றுள்ளனர்.

ஸ்ரீ சட்டாம்பி சுவாமிகளும், நாராயண குருவும், தைக்காட்டய்யா குருவிடம் சீடராக இருந்துள்ளனர். பின் ஸ்ரீ சட்டாம்பி சுவாமிகள், ஸ்ரீ சண்முக வடிவேல் சுவாமிகளிடமிருந்து ராஜயோக பயிற்சி பெற்று, நிர்விகல்பசமாதி அடைந்தது முதல் பிரம்ம ஸ்ரீ சண்மக தாசன் என்னும் சிறப்புபெயர் பெற்று விளங்கினார்.

மனித சிருஷ்டியில் பாவிகளோ, மஹா பாவிகளோ யாருமே இல்லையெனவும், பிசாசு, சாத்தான், இபிலீஸ் என்பவைகளெல்லாம் கட்டுக்கதைகளெனவும், இவ்வகையானவைகள் பிரபஞ்சத்தில் இல்லையெனவும் அய்யா உபதேசித்தார். மனிதர்கள் அனைவரும் உத்தமர்களும், தன்னியர்களும் (புண்ணியவான்) என ''துவையல் பந்தி'' மூலம் நிரூபித்துக் காட்டினார்.

அய்யா வைகுண்டநாதர் தன்னுடைய மூன்றாவது

தவகாலத்தில், சுவாதித்திருநாள் மன்னரால் கைது செய்யப்பட்டு, $3^{3}/_{4}$ மாதம் திருவனந்தபுரம் சிங்காரத் தோப்பு சிறையிலிருந்து பல்வேறுவிதமான சோதனைகளைக் கடந்து, மீண்டும் மணவைப்பதியில் தவமிருந்தபோது, 'சந்நியாசம்' என்றால் என்ன என்பதை மக்களுக்கு போதிக்க எண்ணி, திருவுளங்கொண்டு, வாகைப்பதியில் ஆரம்பிக்கப்பட்ட பேரவையே துவையல்பந்தி. துவையல் பந்தியில் அய்யாவை சரணடைந்தவர்களுக்கு ஞானோபதேசம் கொடுத்து, உபவாசம், அஷ்டாங்க யோக அனுஷ்டானம் முதலியவைகளை உபதேசித்தார். உபவாசம் என்பது பட்டினிகிடப்பதல்ல.

சந்நியாசம் என்பது குடும்பத்தை வெறுத்து காடு, மலை ஏறுவது அல்ல எனவும், அவரவர்களின் குடும்பத்துடன் இருந்து, குடும்பத்தையும் காத்து, தவம்செய்து, ஈஸ்வரனை அடையலாமென போதித்தார். ஈஸ்வரனை அடைவதற்கு, தன்னில் குடிகொண்டிருக்கின்ற ஈஸ்வரனை அறிந்தால் போதும் எனவும், மனித இனத்திற்கு அய்யா வைகுண்டநாதர் எடுத்துக் காட்டினரார்.

இன்று அய்யா வைகுண்டநாதரின் திருநாமத்தால் ஆயிரக்கணக்கான நிழல்தாங்கல்கள் உள்ளன. ஆனால், அய்யாவால் நேரடியாகத் தோற்றுவிக்கப்பட்டவை. ஏழு பதிகளும், ஏழு நிழல்தாங்கல்களுமாகும். அய்யாவின் தவம், அருளாட்சி, இகனைத் திருமணங்கள் இவற்றோடு தொடர்புடையவை பதிகள் எனவும் இவற்றின் சார்புடையவை நிழல்தாங்கல்கள் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றன. ஜீவசமாதி ஸ்தானமான சுவாமிதோப்பு பதி, அம்பலப்பதி, தாமரைக்குளம் பதி, முட்டப்பதி, வைகுண்டபதி, வாகைப்பதி, பூப்பதி ஆகிய ஏழும் பதிகள். செட்டிகுடியிருப்பு, அகஸ்தீஸ்வரம், பாலவூர், சுண்டவிளை, வடலிவிளை, கடம்பன்குளம், உன்பரக்கொடி, (பாம்பன்குளம்) ஆகிய ஏழும் நிழல் தாங்கல்கள். தெய்வத்திற்கு பொன்னோ, பணமோ தேவையில்லை என்பதற்கும், அன்னதானம் செய்வதற்கும், மண்ணும் தண்ணீரும் கொடுத்து நோய்கள் தீர்ப்பதற்கும், அருள்வாக்கு வழங்குவதற்கும் முன்னுதாரணமாக பதிகளும், நிழல்தாங்கல்

களும் விளங்கிவருகின்றன.

அய்யா வைகுண்டநாதரின் தீர்க்க தரிசனங்கள் அருள்நூல், அகிலத்திரட்டு அம்மானையில் நிறையவே உள்ளன. உலகில் நிறைவேறி உள்ளவைகளையும், நடந்து கொண்டிருப்பவை களையும், நடக்கப்போகின்றவைகளையும் காணலாம். அய்யா "துரியஜாக்கிரத்" நிலையிலிருந்து பூதம், வர்த்தமானம், பாவி இவற்றை ரசக்கண்ணாடியில் காணுவதுபோல் கூறியுள்ளதாலும், இவையனைத்தும் மனிதநேயத்திற்காகவும், மனித வாழ்விற்காகவும் இருப்பதால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்து காணப்படுகின்றன.

அய்யா வைகுண்டநாதர் கொல்லம் 1016-ல் அதாவது 106 வருடங்களுக்கு முன்பே, நம்முடைய ஆன்மீக பாரதத்தின் சுதந்திரம் 1947 ஆகஸ்டு 15-ல் (கொல்லம் 1122) கிடைக்கும் என்றும், சுதந்திர பாரதத்தின் சின்னம் சிங்கமுகமாக இருக்கும் எனவும் தீர்க்கதரிசனமாகக் கூறியுள்ளார்.

அய்யா வைகுண்டநாதர் கொல்லம் 1016ல் கூறியுள்ள தீர்க்கதரிசனப்படி கொல்லம் 1026ல் வைகாசி 21ம் தியதி (1851) மனித நன்மைக்காக **"ஜீவசமாதி"**யிலிருக்கின்றார். சரீரத்திலிருந்து 'பிராணன்' வெளியே சென்றால் அச்சரீரம் சவமாகும். சரீரத்தில் பிராணனை நிறுத்தி ஜீவசமாதியில் இருக்கின்ற மகத்துக்கள் இப்பாரத பூமியிலல்லாமல் உலகத்தில் வேறொரு இடத்திலும் இல்லை. பிராணனை விட்ட பொய்தெய்வங்களும், பொய்மதங்களும் நீர்க்குமிழிபோல் பெருகி வருவதைக் காணலாம்.

அய்யா வைகுண்டநாதர் பிராணனை தன் பொன்திரு மேனியில் நிறுத்தி, மானிட நன்மைக்காக கலியுகத்தில் ஜீவசமாதியிலிருக்கின்றார். இந்நிலை எட்டுவது கோடானகோடி மனிதரில் ஒருவருக்கே சாத்தியமாகும். துரியாவஸ்தையும் கடந்து துரியாதீத பதவி அடைந்த அய்யா அதாவத ஜாக்ரத், சொப்பனம், சுசுப்தி, துரியம் எனும் நாலாவது அவஸ்தையும் தாண்டி, இந்நிலையில் சரீரத்தை ஜோதியில் கற்பூரம் போல் லயமடைய சாதித்தும், உலகமக்கள் நன்மைக்காக உடலின் பிராணனை

நிறுத்தி ஜீவசமாதியாக கலியுக கண்கண்ட கடவுளாக இருக்கின்றார். கலியுகம் முடியும் தருவாயில் (பிரளயத்தில்) ஜோதியாவார்.

அய்யா வைகுண்டநாதரின் ஜீவசமாதியிலுள்ள வெண்கண்ணாடி பிரதிஷ்டை மூலம், **"தல்த்துவம் அஸி" 'நீ பிரம்மமாகின்றாய்'** எனும் சாமவேத மஹாவாக்கியம் உணர்த்தப்படுகின்றது. ஆம், அய்யாவின் கருவறையில் நாம் நிற்கும்போது, அவர் நம்மைப்பார்த்து, மகனே! என்னில் உன்னைக் காண்கின்றாய், இனி, உன்னில் என்னைக் காண் என்றல்லவா அன்பொழுக நம்மிடம் கூறி விடைதருகின்றார். இதைத்தானே உச்சிப்படிப்பில்

'சிவசிவா தானானோம்! தானானோம்! தானானோம், தானானோம்!

"சிவசிவா நானானோம்! நானானோம்! நானானோம், நானானோம்!"

என காண்கின்றோம். அதாவது 'நீ, நானும்', 'நான், நீயுமாகி' வேறுபாடற்று ஐக்கியமாகிவிட்டோம். இனிமேல் நம்மிடையே வேற்றுமை இல்லை, சிவனே! பரம்பொருளே! என்பதே பொருள்.

அய்யா வைகுண்டநாதர் மதம் ஸ்தாபிக்கவில்லை. மதத்தையும், மத ஈடுபாடுகளையும் எதிர்த்துள்ளார். இதை அய்யாவின் அருள்மொழிகள் மூலம் அறிந்துணர்ந்து கொள்ளலாம். ஒவ்வொரு மனிதரிலும் குடிகொள்கின்ற ஈஸ்வரனை அறிந்துணர அப்பியாசம் (தவம்) செய்து, ஈஸ்வரனும், தானும் ஒன்றாகி, ஜீவன் முக்தாவஸ்தை, விதேகமுக்தாநிலை, துரியநிலை அடைந்து, ஒவ்வொரு மனிதரிலும் சிருஷ்டியிலே அடங்கியிருக்கின்ற **"அமிர்து"** உண்டு திருப்தியடைந்து, ஜோதியில் லயமடையவே அய்யா வைகுண்டநாதர் உபதேசிக்கின்றார். மனித இனமே உணருவோம்! தன்னியராகுவோம்!

அய்யா உண்டு.

P. சுந்தரம் சுவாமிகள்,
K. பொன்னுமணி.

அய்யா துணை

போதிப்பு

அய்யா!
நாங்கள்,
அறிஞ்சி அறியாமல் செய்ததெல்லாம்,
அய்யா! பொறுக்கணும்!
(ஐந்து முறை சொல்லவும்)

அய்யா! பொறுத்து,
மாப்புத்தந்து,
அய்யா! வச்சி ரெச்சித்துக்கொள்ளணும்!
அய்யா! பொறுமை தரணும்,
அய்யா! நாங்கள்,
ஒண்ணு சொன்னதை ஒண்ணு கேட்டு,
ஒண்ணு சொன்னதை ஒண்ணு கேட்டு,
ஒண்ணுக் கொண்ணு,
நிரப்பாயிருக்கணும்!
அய்யா! நல்ல புத்தி தரணும்!
அய்யா! அன்னமும், வஸ்திரமுந்தந்து,
அய்யா! வச்சி ரெச்சித்துக்கொள்ளணும்!
அய்யா! எங்களை,
யாதொரு நொம்பலம் இல்லாமல்,
யாதொரு சஞ்சலம் இல்லாமல்,
அய்யா! வச்சி ரெச்சித்துத் கொள்ளணும்!

அய்யா உண்டு.

அய்யா துணை

உகப்படிப்பு

(சிறியபகுதி)

1. அய்யா! சிவசிவ சிவசிவா! அரகர அரகரா!
சிவசிவ சிவசிவா! அரகர அரகரா!
2. சிவசிவா குருவுக்கும், குரு பண்டாரத்திக்கும்!
சிவசிவா! முறையோம்! முறையோம்! முறையோம்!
3. சிவசிவா ஆண்டிக்கும், ஆண்டிச்சிக்கும்!
சிவசிவா! முறையோம்! முறையோம்! முறையோம்!
4. சிவசிவா அய்யா நாராயணருக்கும், நாட்டுக்குப் பெரிய வைகுண்டருக்கும்!
சிவசிவா! கட்டியம்! கட்டியம்! கட்டியம்!
5. சிவசிவா அய்யா நாராயணசுவாமி! ஜெயம்! ஜெயம்! ஜெயம்!
6. சிவசிவா அரகரா! ஜெயம்! ஜெயம்! ஜெயம்!
7. தேசம் மயம் ஏகம் திட்டித்த மகாபர இந்திரநாராயண அய்யா நிச்சயித்தபடி யல்லாது மனுஷன் நிச்சயித்தபடியல்ல அய்யாவே!

(முதல் ஆறுபகுதிகளை ஒன்றன்பின் ஒவ்வொன்றும் பதினொருமுறையும், ஏழாவது பகுதி மட்டும் ஒரு முறையும் சொல்ல வேண்டும்)

அய்யா உண்டு.

அய்யா துணை

உச்சிப்படிப்பு

1. சிவசிவா! அரிகுரு! சிவசிவா!
2. சிவசிவா! ஆதிகுரு! சிவசிவா!
3. மூலகுரு சிவசிவா! சிவசிவா சிவமண்டலம்!
4. அல்லா இல்லல்லா, இறைசூல் மகிலல்லா! சிவசிவா சிவமண்டலம்!
5. அரிநாரா யணக்குரு! சிவசிவா சிவமண்டலம்!
6. நாதன் குருநாதன்! சிவசிவா சிவமண்டலம்!
7. பரலோகம் அளந்த பச்சைமால் நாராயணர்! சிவசிவா சிவமண்டலம்!
8. திருவுக்கும் சடைகுரு! சிவசிவா சிவமண்டலம்!
9. செங்கண் திருகுரு! சிவசிவா சிவமண்டலம்!
10. சன்னியாசி குரு! சிவசிவா சிவமண்டலம்!
11. மகாகுரு சிவசிவா! சிவசிவா சிவமண்டலம்!
12. அரி சங்காரகுரு! சிவசிவா சிவமண்டலம்!
13. மகாகுரு சிவசிவா! சிவகுரு மண்டலம்!
14. மண்டலம் குருமண்டலம்! மாயன் குருமண்டலம்!
15. குண்டலம் குருகுண்டலம்! சிவசிவா குருகுண்டலம்!
16. சங்கம் நதிகுண்டலம்! தரணியது குண்டலம்!
17. தரணியது குண்டலம்! தரணி புகழ்குண்டலம்!
18. சிவசிவா எங்கும் நிறஞ்சவர்! ஏகமயமாய் நிறஞ்சவர் சிவசிவா!

19. ஏககுருவாக! படைச்சி அதுநிறைஞ்சவர் சிவசிவா!

20. படைச்சி நிறைஞ்சவர்! பாலன்வடிவு கொண்டவர்!

21. பங்காளர் பங்காளர்! பாருலோகம் அளந்தவர்!

22. அளந்தவர் திருமால்! ஆதிகுரு சன்னியாசி!

23. சிவசிவா சன்னியாசி! செந்தில்வேல் வடிவுமவர்!

24. செந்தில்வேல் சன்னியாசி! செந்தில்வேலவர்!

25. வடிவும் புகழ் படைச்சவர்! மாயன் நிறமானவர் அவர் சிவசிவா!

26. கங்கைக் கண்ணானவர்! காரணம் நிறஞ்சவர்!

27. நிறஞ்சி நிறஞ்சவர்! ஏகமெல்லாம் நிறஞ்சவர்!

28. எங்கும் நிறஞ்சவர்! ஏகமாய் நின்றவர்!

29. மண்டலம் புகழ்படைச்ச! மாயன் குரு சன்னியாசி!

30. சிவசிவா தந்தேநன்னாய்! தன்னானாய்! தந்தேநன்னாய், தன்னானாய்!

31. சிவசிவா த . . ம . . அ . . சி . .! அரி நன்றாகக் குருவே துணை!

32. சிவசிவா தெந்திநன்னாய்! தென்னானாய்! தெந்திநன்னாய், தென்னானாய்!

33. சிவசிவா தன்னானாய்! தன்னானாய்! தன்னானாய், தன்னானாய்!

34. சிவசிவா தானானோம்! தானானோம்! தானானோம், தானானோம்!

35. சிவசிவா நானானோம்! நானானோம்! நானானோம், நானானோம்!

36. சிவசிவா தந்தேனன்னம்! தந்தேனன்னம்! தந்தேனன்னம், தந்தேனன்னம்!

37. மகாலிங்கம்!

38. சிவலிங்கம்!

39. குருலிங்கம்!

40. திருலிங்கம்!

41. ஏக்காலிங்கம்!

42. ஏகலிங்கம்!

43. அரிலிங்கம்!

44. லிங்காலிங்கம்!

45. சொக்காலிங்கம்!

46. சுகலிங்கம்!

47. ஆதிலிங்கம்!

48. அருள்லிங்கம்!

49. அடங்காலிங்கம்!

அய்யா உண்டு

''ஒரு அன்பு மலரெடுத்து அனுதினமும் பூசை செய்வாய்''

- சிவகாண்ட அதிகாரப்பத்திரம்

''பயந்து தர்மமிட்டந்த பரம்பொருளைத் தேடிடுங்கோ''

- பத்திரம்

''நல்லவர் இட்ட தர்மம் நாள்தோறும் பொங்குமடா''

- பத்திரம்

''தாழக்கிடப்பாரைத் தற்காப்பதே தருமம்''

- அகிலத்திரட்டு அம்மானை

அய்யா துணை

உச்சிப்படிப்பு

(உயர்ந்த படிப்பு)

அய்யா வைகுண்டநாதர் அருளிய அருள்நூலில் "உச்சிப்படிப்பு" என்னும் உயர்ந்த மந்திரத்தை அருளியுள்ளார். இதில் மனிதனும், தெய்வமும் ஒன்றே என்னும் அத்வைத தத்துவம் விளக்கப்பட்டுள்ளது.

மஹாவாக்கியங்களாகிய "ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம்" ஆகிய நான்கையும் மந்திர ரூபமாக்கி, கலியுகத்து மனிதர்களின் நன்மைக்காக "உச்சிப்படிப்பு" மூலம் அய்யா வெளிப்படுத்தியுள்ளார். நான்கு வகை வேதங்களும், பதினைந்து பெரும்பகுதிகளாக பகுக்கப் பட்டுள்ளது. இவற்றைப் புரிந்து கொள்வது கடினமாகையால், இவற்றைச் சுருக்கி அஷ்டாங்கயோகமாக விளக்கியுள்ளார். அவை 'இயமம், நியமம், ஆசனம், பிரணாயமம், பிரத்தியகாரம், தாரணை, தியானம், சமாதி, என்பவைகளாகும். இத்தத்துவமே திரேதாயுகத்தில் ஸ்ரீராமன் வாயுதேவரின் புத்திரனாகிய ஹனுமானுக்கு உபதேசித்ததும், துவாபரயுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்ததும், கலியுகத்தில் அய்யா வைகுண்டநாதர் மந்திரரூபத்தில், எளியமுறையில் மனித இனத்திற்கு உபதேசித்ததுமாகும்.

இம்மந்திரத்தை சரீரத்தின்மூலம் அனுபவிக்க முயற்சிக்கின்ற யாதொரு சாதகனுக்கும் ஆத்ம ஞானம் உண்டாகும். இதையே துவையல் பந்தியினர் மூலம் அய்யா வைகுண்டநாதர் அகிலத்திற்கு உணர்த்தியுள்ளார். சாதகனுக்கே தத்துவஞான அனுபவத்தையும் அறிந்து கொள்ளமுடியும். மற்றுள்ளோர் இப்பிரபஞ்சத்தில் காண்பவை அனைத்தையும் சத்தியம் என

எண்ணி, அதில் கிடந்து உழன்று தவிப்பார்கள். பிரபஞ்சத்தில் காண்பவை அனைத்தும் நிலையற்றவை என உணர்ந்து, கண்களுக்குப் புலப்படாத, எங்கும் நீக்கமறநிறைந்த, அழிவற்றப் பரம்பொருளினை அடைவதற்கு அய்யா வைகுண்டநாதர் "உச்சிப்படிப்பு" மூலம் அறிவூட்டுகின்றார். சிருஷ்டிக்குப்பின் ஒவ்வொரு ஜீவனுக்கும் அழிவற்ற முக்தியை தந்து பரிபாலிக்கின்ற குருவாகிய நாராயணரையும், அதி உன்னத நிலையில் முமூட்சுகள் பரப்பிரம்மத்தில் லயிப்பதற்குரிய வழிவகுத்து தருபவராகிய சதாசிவனையும் வணங்கி மந்திரத்தை ஆரம்பிக்கின்றார்.

அஷ்டாங்கயோகம்

அஷ்டாங்கயோகம் சரீரதத்துவப்படி கீழுள்ள முறைப்படி விளக்கப்பட்டுள்ளது.

1. **இயமம்** - அனைத்தும் பிரம்மம் என அறிந்து இந்திரியங்களை கட்டுப்படுத்துவது.
2. **நியமம்** - இந்திரியங்களைக் கட்டுப்படுத்தி மனதைப் பிரம்மத்தில் நிலை நிறுத்துவது.
3. **ஆசனம்** - நிரந்தரமானதும், தொடர்ச்சியானதுமான பிரம்மசிந்தையே ஆசனம்.
4. **பிரணாயமம்** - மனத்தில் (சித்தில்) காண்பவை அனைத்தையும் பிரம்மமாகக் காண்பது. (சுவாசம் பிடிப்பல்ல)
5. **பிரத்தியகாரம்** - சித்தத்தை விடயங்களில் (உலகியலில்) செல்லவொட்டாமல் தடுத்து, ஆத்மாவில் ஆனந்திப்பது. (ஜீவமகிழ்ச்சி)
6. **தாரணை** - மனம் செல்லுமிடமெல்லாம் பிரம்மத்தை விளங்கச் செய்வது தாரணை.
7. **தியானம்** - நான் பிரம்மம் என்ற அளவு கடந்த சுத்த உணர்வு அடைவதற்குரிய மயக்கநிலை.

8. **சமாதி** - சங்கல்ப, விகற்பம் அற்றநிலை, (சிந்தையற்றிருப்பது) அதாவது வேறுபாடற்ற முழுமுதற்பொருளை உணர்ந்த நிலை.

மஹா வாக்கியங்கள்

1. பிரஞ்ஞானம் பிரம்மம் - ரிக்வேதம் - ஞானமே, பிரம்மாகின்றது.

2. அஹம் பிரம்மாஸ்மி - யஜுர்வேதம் - நானே பிரம்மம்.

3. தல்த்துவம் அசி - சாம வேதம் - 'நீ' தான் பிரம்மம் .

4. அயம் ஆத்மா பிரம்மம் - அதர்வண வேதம் - நானும் பிரம்மமும் ஒன்றே

'தத்'=ஈஸ்வரன்; 'துவம்'=ஜீவன்.

நான்கு வேதங்களையும் மீண்டும் கீழ்க்கண்டவாறும் விளக்கத்திற்கு உட்படுத்தலாம்.

1. சாமவேதம் - குரு, சீடனுக்கு உபதேசிப்பது

2. யஜுர்வேதம் - சீடனின் அப்பியாசம் (சாதகம்)

3. ரிக் வேதம் - அப்பியாசம் செய்யும்போது ஏற்படும் சுயம் அனுபவம்

4. அதர்வண வேதம் - நானும், பிரம்மமும் ஒன்று எனும் திட நம்பிக்கை.

அத்வைத வேதாந்திகளாகிய தத்துவஞானிகள், மஹாவாக்கியங்களை, சரீரத்தில் நான்கு அவயவங்கள் மூலம் உறுதி செய்வார்கள். மஹாவாக்கியங்கள், 'சரீரதத்துவம்' என்பது உட்பொருள். இது ஆதியந்தமற்றது. இத்தத்துவத்தை நற்குருவிடமிருந்து அறிந்து சாதகம் செய்ய வேண்டும், உத்தம குருவிடமிருந்து பரோட்க்ஷஞானம் (உட்பொருள்) சாதகனுக்கு கிடைத்தால் தான், அபரோஸ்டானுபூதி (அனுபவ அறிவு) உண்டாகும் என்பதாகும்.

அய்யா உண்டு.

கருத்துரையாளர்

அய்யாதுணை

உச்சிப்படிப்பு

(உயர்ந்தபடிப்பு)

இப்பிரபஞ்சத்தில் காண்பவை அனைத்தும் நிலையற்றவை எனும் தத்துவம் மூலம், முமூட்சுகளாகிய சான்றோர் மக்களுக்கு நம்பிக்கை உண்டாக்கவும், பிரபஞ்சத்தையும், ஜீவனையும், மித்தை(மாயை)யிலிருந்து மீட்கவும், அத்வைத பிரம்மபாவம் உண்டாக்கி அனுக்கிரகிக்கின்ற ஆசாரியனாகிய சிவனையும், சம்சார துக்கத்தைத் தீர்த்து வாழ்க்கையை மேம்படுத்துகின்ற ஆசாரியனாகிய நாராயணரையும், முன் நிறுத்தி அய்யா வைகுண்ட நாதர் மந்திரத்தைத் தொடங்குகின்றார்.

1. சிவ சிவா! அரிகுரு! சிவ சிவா!

சிவனே! களங்கமற்றவனே! ஆதியந்தமற்ற சிவனே! சம்சாரத் துக்கத்தை தீர்க்கின்றவனே, நாராயண சொரூபியே! ஆச்சாரியனுமான சிவனே! பரம்பொருளே! வணக்கம்!

2. சிவ சிவா! ஆதிகுரு! சிவசிவா!

சிவனே! ஆதிகுருவாகிய சிவனே! சச்சிதானந்த சொருபியான சிவனே! சிவப்பொருளே!

3. மூலகுரு சிவசிவா! சிவசிவா சிவமண்டலம்!

சிவனே! மூலகுருவும் பிரணவ சொருபியுமான சிவனே! மண்டலமெல்லாம் நிறைந்த சிவனே! பரம்பொருளே!

4. அல்லா இல்லல்லா, இறைசூல் மகிலல்லா! சிவசிவா சிவமண்டலம்!

உற்பத்திக்கு காரணனே! பஞ்சபூதங்கட்கப்பால் ஸ்திதி (ஆட்சி) செய்கின்ற பரிசுத்தமான பரம்பொருளே! சிவனே,

சிவப்பொருளே! மண்டலமெல்லாம் நிறைந்திருக்கின்ற பரம்பொருளே!

5. அரி நாராயணக்குரு! சிவசிவா சிவமண்டலம்!

குருவே! அழிவற்ற நித்தியப்பொருளே, கருணாகரனே! அரி நாராயணரே! சிவனே! மண்டலமெல்லாம் நிறைந்திருக்கின்ற சிவனே! பரம்பொருளே!

6. நாதன் குருநாதன்! சிவசிவா சிவமண்டலம்!

சிவனே! எல்லா சராசரங்கட்கும் நாதனாக இருக்கின்றவனே! பிரணவநாதத்தை உண்டாக்கிக்கொண்டிருப்பவனே! ஆச்சாரியனுமான சிவனே! மண்டலமெல்லாம் நிறைந்திருக்கின்ற பரம்பொருளே!

7. பரலோகம் அளந்த பச்சைமால் நாராயணர்! சிவசிவா சிமண்டலம்!

இவ்வுலக, மேலுலக உயிரினங்களுக்கு படியளக்கின்ற சச்சிதானந்தப்பொருளே! பரலோகத்திற்கு வழிகாட்டுகின்ற அய்யா நாராயணரே! சிவனே! மண்டலமெல்லாம் நிறைந்திருக்கின்ற பரம்பொருளே!

8. திருவுக்கும் சடைகுரு! சிவசிவா சிவமண்டலம்!

உலகியலுக்கு அடிப்படையான பூமிதேவிக்கு மேன்மை கொடுக்கும் காரணகர்த்தனே! ஞான குரு வடிவானவனே! சிவனே! மண்டலமெல்லாம் நிறைந்திருக்கின்ற பரம்பொருளே!

9.செங்கண் திருகுரு! சிவசிவா சிவமண்டலம்!

ஞானக்கண் உடைய சிவனே! ஸ்ரீ குருவாகிய சிவனே! மண்டலமெல்லாம் நிறைந்திருக்கின்ற பரம்பொருளே!

10. சன்னியாசி குரு! சிவ சிவா சிவ மண்டலம்!

சன்னியாசியானவனும் நீயே, அனைத்தையும் உள் அடக்கியவனும் நீயே, குருவும் நீயே, சிவனே! மண்டலமெல்லாம் நிறைந்திருக்கின்ற சிவனே! பரம்பொருளே!

11. மகாகுரு சிவசிவா! சிவசிவா சிவமண்டலம்!

மஹாகுருவாக இருக்கின்ற சிவனே! மண்டலமெல்லாம் நிறைந்திருக்கின்ற சிவனே! பரம்பொருளே!

12.அரி சங்காரகுரு! சிவ சிவா சிவமண்டலம்!

சம்சாரத்துக்கத்தை தீர்த்து, சச்சிதானந்தம் அருள்பவனும், அழியாப்பொருளும், குருவுமான நாராயணரே! சிவனே! மண்டலமெல்லாம் நிறைந்திருக்கின்ற பரம்பொருளே!

13. மகாகுரு சிவசிவா! சிவகுரு மண்டலம்!

மகாகுருவே! பரிபூரணனே! பிரபஞ்சம் நிறைந்தவனே, ஆதிகுருவே! சிவனே! பரம்பொருளே!

14. மண்டலம் குரு மண்டலம்! மாயன் குருமண்டலம்!

மூன்று மண்டலங்களும் நிறைந்திருக்கின்ற குருநாதனே! ஆறு ஆதாரங்களுக்கப்பால் ஸ்திதி செய்கின்றவனே! மாயையை அகற்றி பரப்பிரம்மத்தில் செலுத்துபவனே! சிவனே! பரம்பொருளே!

15. குண்டலம் குருகுண்டலம்! சிவசிவா குருகுண்டலம்!

பிரபஞ்சம் நிறைந்த பரிபூரணனே! குருமயமான சிவனே! மண்டலமெல்லாம் நிறைந்து பேரொளி பரப்புகின்ற குருநாதா! சிவனே! பரம்பொருளே!

16. சங்கம் நதி குண்டலம்!தரணியது குண்டலம்!

பூவுலகம் முழுதும் நிறைந்து நிற்கின்ற உத்தமராகிய

மனிதசமூகமும், ஞானத்தால் ஸ்ரீகுருமயமாய் நிற்கும் ஆகாசமும் சங்கமித்து, பூலோகத்தாரால்,சிவனே! சிவப்பொருளே! நீ புகழப்படுகின்றாய். அது எவ்வாறென்றால், நதிகள் மகாசமுத்திரத்தில் இணைவது போல், உத்தமராகிய ஜனசமூகம் பரம்பொருளாகிய உம்மில் இணைவதாகும்.

17. தரணியது குண்டலம்! தரணி புகழ் குண்டலம்!

பூலோகம் பிரபஞ்சத்தில் அடங்கியதும், வைகுண்டலோகம் போல் புகழ்பெற்றதும், சிவசக்தி திருவிளையாடலுமன்றோ, பரம்பொருள்.

18. சிவசிவா எங்கும் நிறைஞ்சவர்! ஏகமயமாய் நிறைஞ்சவர் சிவ சிவா!

சிவனே! பிரபஞ்சம் முழுதும் நிறைந்தவனே! (ஒன்றோடும் பற்றில்லாது எங்கும் நிறைந்தவனே) சிவனே! பரம்பொருளே!

19. ஏககுருவாக! படைச்சி அது நிறைஞ்சவர் சிவ சிவா!

மூலப்பொருளே! முழுமுதற்குருவே! பலவிதமான படைப்பினைப்படைத்து அதில் ஒவ்வொன்றிலும் நிறைந்து அடங்கியிருக்கின்றவனே! சிவனே! பரம்பொருளே!

20. படைச்சி நிறைஞ்சவர்! பாலன் வடிவு கொண்டவர்!

அணுமுதல் அண்டம்வரை உற்பத்திக்கு காரணகர்த்தனே! எப்பொழுதும் முதுமையற்றவனே, பாலனாக ரூபம் தரித்தவனே! சிவனே! பரம்பொருளே!

21. பங்களார் பங்காளர்! பாருலோகம் அளந்தவர்!

சம்சாரத்துக்கத்தில் உழல்கின்ற உயிரினங்களை கரையேற்றி, சுகதுக்கங்களில் பங்கு கொள்பவனும் நீயே! பிரபஞ்சத்தை தன் காலடியால் அளந்தவனும் நீயே! பாவத்தை நிர்மூலமாக்கும்

நாராயணனும் நீயே! சிவனே! பரம்பொருளே!

22. அளந்தவர் திருமால் ! ஆதிகுரு சன்னியாசி!

ஆதிகுருநாதா! பூலோகத்தை திருவடியால் அளந்த மஹாவிஷ்ணுவே! சன்னியாசியாகிய பற்றற்ற பரம்பொருளே!

23. சிவசிவா சன்னியாசி! செந்தில்வேல் வடிவுமவர்!

சிவனே! சன்னியாசியாகிய சிவனே! வேல்ரூபமடைந்து ஞானத்தைவிளங்கச் செய்கின்ற சிவனே! பரம்பொருளே!

24. செந்தில்வேல் சன்னியாசி! செந்தில் வேல் அவர்!

ஞானவேல் ஆகிய உருவத்தை அடைந்தவனும் நீயே! சன்னியாசத்தின் முத்திரையாகிய ஞான வடிவும் நீயே!சிவனே! பரம்பொருளே!

25. வடிவும் புகழ்படைச்சவர்! மாயன் நிறமானவர் அவர் சிவசிவா!

சத்-சித்-ஆனந்த சொரூபியும் நீயே! சச்சிதானந்தத்தால் புகழ்பெற்றவனும் நீயே! மாயையால் சக்தியானவனும், பிரபஞ்சம் முழுவதும் நிறைந்தவனும் நீயே! அனைத்தும் நீயே! மஹேஸ்வரா! பிரபோ! சிவனே! பரம்பொருளே!

26. கங்கைக் கண்ணானவர்! காரணம் நிறைஞ்சவர்!

காரணனும் நீயே! கர்த்தனும் நீயே! ஞானத்தின் முதலும் நீயே! முடிவும் நீயே! ஆகாசகங்கையில் சந்திரகலையும் நீயே! எங்கும் நிறைந்தவனும் நீயே! மஹேஸ்வரா! பிரபோ! சிவனே! பரம்பொருளே!

27. நிறைஞ்சி நிறைஞ்சவர்! ஏகமெல்லாம் நிறைஞ்சவர்!

எங்கும் நிறைந்தவனும் நீயே! பிரபஞ்சம் முழுவதும் ஏகமாக

நிறைந்திருப்பவனும் நீயே! பரமேஸ்வரா! பிரபோ! சிவனே! பரம்பொருளே!

28. எங்கும் நிறைஞ்சவர்! ஏகமாய் நின்றவர்!

பிரபஞ்சம் நிறைந்து துளும்பி நிற்பவனும் நீயே! ஏகமாய் நிறைந்து நிற்கின்றவனும் நீயே! மஹேஸ்வரா! பிரபோ! சிவனே! பரம்பொருளே!

29. மண்டலம் புகழ்படைச்ச! மாயன் குரு சன்னியாசி!

பிரபஞ்சம் முழுவதும் புகழ்பெற்றவனும் நீயே! ஆதிகுரு நாதனும் நீயே! சன்னியாசியானவனும் நீயே! உற்பத்தி, ஸ்திதி, நாசம் இல்லாதவனும் நீயே! மனம், வாக்கு, காயத்திற்கு அப்பாற்பட்ட சக்தியோடு கூடியவனும் நீயே! 'மாயை' அணுகாதவனும் நீயே! உமாபதியே! மஹாதேவா! சம்போ! சிவனே! பரம்பொருளே!

(1முதல் 29 முடிய உள்ள மந்திரங்கள் ஞானோபதேசமாகும்)

30. சிவசிவா தந்தேனன்னாய்! தன்னானாய்! தந்தே னன்னாய், தன்னானாய்!

தரவேண்டிய அனைத்து நன்மைகளையும், அனுக்கிரங் களையும் ஒரு சிறிதும் குறைவு படாமல் நான் உனக்கு கொடுத்து விட்டேன். அறிந்து உணரவேண்டியது, நீ! உனது மனபக்குவம் பொறுத்து அறிந்துணர்ந்து கொள், சிவனே! பரம்பொருளே!

31. சிவசிவா த . . ம . . அ . . சி . . ! அரி நன்றாகக் குருவே துணை!

தல்த்துவம் அசி-அது 'நீ' ஆகின்றாய் என்னும் அறிவு கிடைப்பதற்கு முன்பு, நின்னில் ஸ்திதி செய்கின்றதும், சம்சாரத்துக்கத்தை தீர்ப்பவருமாகிய அரிநாராயணரை அறிந்து கொள்ளுங்கள். ஆதிகுரு சதாசிவன் உங்களுக்கு உதவிபுரிவாராக, சிவனே! பரம்பொருளே!

32. சிவசிவா தெந்தினன்னாய்! தென்னானாய்! தெந்தினன்னாய், தென்னானாய்!

அஞ்ஞானம் அகன்று எவ்வாறு விஞ்ஞானம் உண்டாயிற்றோ, அவ்விதத்தில் பரப்பிரம்ம சிந்தையால், சுயம் சிவமாய், பரப்பிரம்மமாகிவிடு, சிவனே! பரம்பொருளே!

33. சிவசிவா தன்னானாய்! தன்னானனாய்! தன்னானாய், தன்னானாய்!

சுயம் உணர்ந்து மனிதனாகிய 'நீ' பிரம்மமாகிவிடு. அப்போது, "நீயே நான்", "நானே நீ" என்பதை அறிவாய், சிவனே! மஹேஸ்வரா! பிரபோ! பரம்பொருளே!

34. சிவசிவா தானானோம்! தானானோம்! தானானோம், தானானோம்!

தான்+நான்+ஓம்

அம்முறைப்படி "நான், நீயும்", "நீ, நானுமாகி" வேறுபாடற்று ஐக்கியம் ஆகிவிட்டோம். இனிமேல் நம்மிடையில் வேற்றுமை இல்லை. நாம் ஏகமானோம், சிவனே! பரம்பொருளே! மஹேஸ்வரா! பிரபோ!

35. சிவசிவா நானானோம்! நானானோம்! நானானோம், நானானோம்!

நான்+நான்+ஓம்

"நீ", யும் "நானும்" ஒன்றாகி விட்டோம். அறிவும், அனுபவமும் வந்துவிட்டது. "நான்" எனவும் "நீ" எனவும் உள்ள வேற்றுமை அழிந்து விட்டது. இரண்டும் ஏகமாகி விட்டது. சிவனே! பரம்பொருளே!

36. சிவசிவா தந்தேனன்னம்! தந்தேனன்னம்! தந்தேனன்னம், தந்தேனன்னம்!

தந்தேன்+அன்னம்

சரீர வளர்ச்சிக்கு ஆகாரம் எவ்வளவு முக்கியமோ அதுபோன்று ஆத்மீக வளர்ச்சிக்கு முக்கியமான ஞானோபதேசம் பகர்ந்து தந்து விட்டேன். ''நானே நீ'', ''நீயே நான்'' சிவனே! பரம்பொருளே!

(30 முதல் 36 முடிய உள்ள மந்திரங்கள் அனுபவங்கள்)

37. மகாலிங்கம்! - மங்கள சூசகமானதும், மேன்மை நிறைந்ததும் ஆகிய மகாலிங்கம் நானானேன்.

38. சிவலிங்கம்! - சிவ சொரூபத்தின் மங்களசூசகமான அடையாளம் சிவலிங்கம், அது நானானேன்,

39. குருலிங்கம்! - அஞ்ஞானம் அகற்றி, ஆத்மஞானம் அருள்கின்ற குருலிங்கம் நானானேன்.

40.திருலிங்கம்! - எட்டுவகை தெய்வீகக்குணத்துடன் இருக்கின்ற திருலிங்கம் நானானேன். (ஆசையின்மை, தவமுடைமை, பொறுமை, சந்தோசம்,கிருபை, அடக்கம், அறிவு, வாய்மை) இவை எட்டும் முமூட்சுகள் (அதாவது மோட்சத்தை அடைவதில் நாட்டமுடையவர்களுக்கு) வேண்டிய முக்கிய குணங்கள்.

41. ஏக்காலிங்கம்! - அக ஒளியாயும், புற ஒளியாயும் நாதப்பிரம்மமாகவும் இருக்கின்ற ஏக்காலிங்கம் நானானேன்.

42. ஏகலிங்கம்! - அறிவே பிரம்மமாகி ஆனந்தமாக இருக்கின்ற ஏகலிங்கம் நானானேன்.

43. அரிலிங்கம்! - சம்சாரத்துக்கத்தை தீர்க்கின்றதும், எங்கும் நிறைந்த உணர்வுடன் கூடியதும், பரம்பொருளுமாகிய அரிலிங்கம் நானானேன்.

44. லிங்காலிங்கம்! - ரூபமாகவும், அரூபமாகவும், அரூபரூபமாகவும் இருக்கின்ற லிங்கா லிங்கம் நானானேன்.

45. சொக்காலிங்கம்! - வேதங்களுக்குப் பரம்பொருளாகவும், தத்துவங்களின் வடிவமாகவும் இருக்கின்ற சொக்காலிங்கம் நானானேன்.

46. சுகலிங்கம்! - எட்டுவித சுகங்களில் அடங்கியிருக்கின்ற பெரும் ஞானத்தை ஊட்டுகின்ற சுகலிங்கம் நானானேன்.

ஆனந்தம் எட்டு வகை

1. **விடயானந்தம்** - போகங்களில் வரும் ஆனந்தம்
2. **பிரம்மானந்தம்** - மூலதாரத்தில் இருந்து வருகின்ற ஆனந்தம்.
3. **வாசனானந்தம்** - நித்திரை தெளிந்துவரும் சமயத்துள்ள ஆனந்தம்.
4. **ஆத்மானந்தம்** - எங்கும் நிறைந்திருப்பது "நான்" தான் என்பதை உணருவதிலுள்ள ஆனந்தம்.
5. **முக்கியானந்தம்** - 'சமாதி' நிலையில் உள்ள சுகம்
6. **நிஜானந்தம்** - விருப்பு, வெறுப்பற்ற நிலையில் வரும் சுகம்.
7. **அத்துவிதானந்தம்** - தானும், நானும் ஒன்று என்பதை உணருவதிலுள்ள ஆனந்தம்
8. **வித்தியானந்தம்** - மஹாவாக்கியங்கள் நான்கின் விசாரத்தால் உதயமான ஆனந்தம். தத்துவ ஞானிகளுக்கு இவ் எட்டுவகை சுகங்களும் அனுபவத்தில் வரும்.

47. ஆதிலிங்கம்! - எல்லாவற்றிற்கும் ஆதியாகவும், அநாதியாகவும் இருக்கின்ற ஆதிலிங்கம் நானானேன்.

48. அருள்லிங்கம்! - அருள் ஒளியாகவும், அருள் வடிவமாகவும் இருக்கின்ற அருள்லிங்கம் நானானேன்.

49. அடங்காலிங்கம்! - எல்லை வரம்புகள் இல்லாததும், நற்பண்பாகவும், பண்புகளுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்கின்ற அடங்காலிங்கம் நானானேன்.

(37 முதல் 49 முடிய உள்ள மந்திரங்கள் பரப்பிரம்மலயமாகும்)

குறிப்பு : இங்கு பல லிங்கமந்திரங்கள் விளக்கப்பட்டுள்ளன. உடலும், உயிரும் ஏகோபிப்பது லிங்கம் எனப்படும். சிவனும், சக்தியும் ஏகோபிப்பது சிவலிங்கம் எனப்படும். ஸ்தூல, சூக்கும, காரண சரீரங்கள் ஏகோகிப்பது லிங்கசரீரம் எனப்படும். இப்பாரதத்தில் உள்ள மஹரிஷீஸ்வரர்கள் அடைந்த விஞ்சை, நிர்விகல்பசமாதி, ஜீவபிரம்ம ஐக்கியம், ஞானோதயம் என்பவை இவைதான் என தெளிவுபடுத்தியுள்ளனர்.

இம்மந்திரங்களின் உட்பொருளினை நன்கு அறிந்துணர்ந்து, எவ்வித சந்தேகமும் ஏற்படா வண்ணம், பரப்பிரம்மத்தில் லயமாக, அய்யாவைகுண்டநாதர் ''உச்சிப்படிப்பு'' என்னும் உயர்ந்த மந்திரம் மூலம் உலக ஜனங்களுக்கு உபதேசிக்கின்றார்.

ஜீவ மந்திரமாகிய இம்மந்திரத்தை படிக்கும்போது, உள்ளும் புறமும் ஏகோபித்து பரம உன்னத நிலையை அடையலாம். அனைத்து நாடி நரம்புகளையும் சுத்தமாக்கும். அப்போது ஞானமும் கிடைக்கும். உச்சிப்படிப்பில் கர்ம்மம், பக்தி, ஞானம், யோகம் இவை துளும்பி நிற்கின்றன. இதனை அறிந்தால் ஆணவங்கள் அழிந்து, ஆன்மா பிரகாசிக்கும். ''உச்சிப்படிப்பு'' மறை பொருளும், மனிதர்களால் வர்ணிக்கமுடியாததுமாகிய தத்துவ ஞானமாகும். இவை பாராயணம் செய்து கொள்ள வேண்டிய முக்கிய மந்திரங்களாகும். நான்கு மஹாவாக்கியங்களையும் ஒன்றுப்படுத்தி அனுபவம் பெற்று இது போல் எளிதாக யாரும் உபதேசித்ததில்லை. பரம்பொருளினை அப்பியாசத்தின் மூலம் அறிய ''உச்சிப்படிப்பு'' மிகவும்

உன்னதமானதாகும், சிவனே! பரம்பொருளே!

சுயமாகிய சதாசிவனின் உலகம் சப்தரிஷி மண்டலத்தின் மேல் பகுதியில் உள்ளது. அதை அடுத்து கீழாக உமாலோகம், விஷ்ணுலோகம், சத்தியலோகம், தபோலோகம், ஜனர்லோகம் என்னும் முறையில் இவ்உலகங்கள் ஸ்திதி செய்கின்றன. எல்லா உலகங்களுக்கும் மேலான சுயம்புவாகிய பரமசிவன், சிவசக்தி சம்மேளராகி காட்சியளிக்கின்றார். இவர் ஆதிநாதன் முதல் யோகீஸ்வரர்கள், தேவர்கள், முனீந்திரன்வரை உள்ளோரால் பூஜிக்கப்பட்டு வணங்கப்படுகின்றார்.

சிவலோகம் 15 கோடி யோசனை தூரம் நீள அகலமுடையதாய் இப்பாரதத்து மகத்துக்கள் கண்டறிந்துள்ளனர். இப்பரம்பொருளே ஜோதிசும், பரம்மஹம்சமும், ஈஸ்வரனுமென அறிந்து கொள்ள வேண்டும். பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கின்ற அவரின் ரூபாரூபத்தை ஊனக்கண்களால் காண்பதற்கு சாத்தியமற்ற விதத்தில், தேஜோமயமாயிருக்கின்றது என அறிந்து கொள்ள வேண்டும்.

இப்பாரதபூமியில் செய்கின்ற சத்கருமங்களின் பலன் மஹாபுண்ணியமாகும். அதனாலேயே இப்பாரதபூமிக்கு புண்ணியபூமியெனவும், ஞானபூமியெனவும், ஆர்ஷ பாரதமெனவும், பல நாமங்கள் உண்டாயிற்று. ஞானயோகி கட்கு மட்டுமே காண சாத்தியமுடைய அதிமனோகரமாகிய ஒரு மெல்லிய துவாரம் புருவமத்தியில் ஸ்திதி செய்கின்றது. இதன் சற்று மேற்பகுதியில் அமிர்துகடல் ஸ்திதி செய்கின்றது. இதனை அய்யா வைகுண்டநாதர் சாட்டுநீட்டோலையில் 'மேலக்குளம்' என விளக்கியுள்ளார். இவற்றையெல்லாம் இப்பாரத பூமியிலுள்ள யோகீஸ்வரர்கள் பல யுகங்களாக அறிந்து, ஆண்டு அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலக்குளத்தில் சித்தர்கள், ஞானயோகிகள், திருமூர்த்திகள் இவர்களால் பூஜிக்கப்படுகின்ற ஸ்ரீசக்கரரூபிணியாகிய பராசக்தி, சதாசிவனுடன் சேர்ந்து தத்துவங்களையும் கடந்த வேதங்களால் ஆராதிக்கப்படுகின்ற

ராஜ ராஜேஜஸ்வரியாகிய ''வாலை'' ஸ்திதி செய்கின்றாள்.

இவ் ஸ்ரீவித்தையை முறையாக பூஜிப்பவர்களுக்கு வித்தியாகடாட்சமும், பிரம்மபிராப்தியும் உண்டாகும். இவ் ''வாலை''யை உபாசிக்காமல் பிற மந்திரங்களை உச்சரிப்பதினால் எவ்விதப்பயனும் உண்டாகப்போவதில்லை. ஞானத்தாலும், யோகத்தாலும் மட்டுமேயன்றி மற்றெந்த வழியிலும் பரப்பிரம்மத்தை அடையமுடியாது என்பது பொருள். இந்நிலை அடைவதுவரை தன்னைக் காத்து இரட்சிக்க பிரம்மாதி தேவகணங்கள் இராப்பகலாக காத்து நிற்கும். இந்நிலையைத் தான் அய்யா வைகுண்டநாதருக்கு மலர்மாரி சொரிந்து தேவரிஷிகள் ஆதரித்ததாக ''சாட்டுநீட்டோலை''யில் கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது.

''முப்பத்து முக்கோடி தேவரிஷியுடனே
முனியும் வந்தெடுத்தாரே சிவனே அய்யா!
மாமுனிதாயுடனே வழியே நடந்துவர
மலர்மாரி பெய்ததுண்டே சிவனேஅய்யா!''

இப்பூமியில் தெய்வமாக நாதப்பிரம்மத்தைத்தவிர வேறொன்றுமில்லை. இப்பிரபஞ்சம் இரண்டுவஸ்துக்கள் சேர்ந்து உண்டானதாகும். இரண்டு வஸ்துக்கள் லயமாவதே நாதம். ஹம்ஸ மந்திரத்தால் பிரபஞ்சம் நிறைந்திருக்கின்றது. எனவே எல்லாவற்றிற்கும் மூலமாகவுடையது நாதப்பிரம்மமே என அறிய வேண்டும். அனைத்து ஸ்தூல, சூக்கும, காண்டங்களும் நாதத்திலிருந்து உண்டானவைகளாகும்.

''ஓம்''கார பிரம்மமே அழிவற்ற பிரணவ மந்திரம். ''ஓம்''கார மந்திரத்தால் ரேசக, பூரக, கும்பக அப்பியாசம் செய்ய வேண்டும். சரீரம் பல கோடி அணுக்களால் ஆனது. ஒவ்வொரு அணுவின் மத்தியிலும் சிவபஞ்சாட்சரம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. இவற்றை அறிந்து அடைந்தால் பரம உன்னத நிலை அடையலாம். இங்கு காணக்கூடிய ஜடவஸ்துக்களும், பஞ்சாட்சரத்தினால் உண்டானவைகளாகும். ஆதலால் மேற்கதி

அடையவிரும்பும் எந்தவொரு மனித ஜீவியானாலும் சரி, இப்பாரதத்தில் மஹரிஷீஸ்வரர்கள் காட்டிய வழியில், அவர்கள் கண்டறிந்த சத்தியநாதப்பிரம்மத்தை அடைய முயலுங்கள். இவையல்லாமல் மற்று யாதொரு மார்க்கமும் இல்லை.

பிரபஞ்சம் பதினான்கு உலகங்களாக வகுக்கப்பட்டுள்ளது. அதில் உன்னத நிலையிலுள்ள ஏழு உலகங்களை திரித்தறிவதற்கு மகத்துக்கள் நியமித்துள்ளார்கள். அவை 1) பூலோகம், 2) பூவர்லோகம், 3) சொர்க்கலோகம், 4) மஹர்லோகம், 5) ஜனலோகம், 6) தபோலோகம், 7) சத்தியலோகம் என்பவைகளாகும்.

ஏழாவதான சத்தியலோகத்தில் சிவலோகம் , உமாலோகம், விஷ்ணுலோகம், பிரம்மலோகம் இவை நான்கும் ஸ்திதி செய்கின்றன என பாரத தத்துவஞானிகள் கண்டறிந்துள்ளனர். துருவலோகம், அமராவதி, சப்தரிஷிமண்டலம், கிரகமண்டலம், தாரமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்டலம் இவைகளெல்லாம் ஐந்தாம்படியில் ஸ்திதி செய்வதாகக் கண்டறிந்துள்ளார்கள். மற்றவை ஆறாம், ஏழாம் படிகளில் உட் படுத்தப்பட்டுள்ளது. இந்நியமப்படி சொர்க்கலோகத்திலிருந்து ஏழுபடிகள் கடந்து சத்தியலோகத்தில் உள்ள சிவபதத்தில் லயம் ஆகவேண்டும். அய்யா வைகுண்டநாதர் அவருடைய 24 -ம் வயதில், இந்நிலையையெய்தி ஜீவமுக்தாவஸ்தையின் மூலம் பிரம்மபதத்தில் லயமானார்.

ஆத்மீகமாக சிந்தித்தால் சொர்க்கலோகங்கூட வெறும் பௌதீகம்தான். மேற்கூறப்பட்ட உலகங்களெல்லாம் உடற்கூறு தத்துவங்களாகும். 1) பாதத்தின் அடிப்பாகம் (பாதாளம்), 2) பாதத்தின் மேல்பாகம் 3) பாதசந்தி, 4) கணுக்கால், 5) முழங்கால், 6) தொடை 7) இடுப்புபகுதி, 8) நாபிபகுதி, 9) வயிற்றுப்பகுதி, 10) இதயபகுதி, (சொர்க்கலோகம்), 11)ஜனலோகம் 12) புருவமத்தியம், 13) பிரம்மலோகம், பிரம்மலோகத்தில் விஷ்ணுலோகம், உமா லோகம், சிவலோகம் இவை ஸ்திதி செய்கின்றன. ஞானயோகிகளால் மட்டுமே அறியக்கூடிய

ஸ்தானங்களாகும் இவை. 14) சொல்லிவிளக்கமுடியாத பரப்பிரம்மஸ்தானம், இவ்வாறு சரீரக்ஷேத்திரத்தை பாரதத்தில் உள்ள மகத்துக்கள் 14 - உலகங்களாகப் பகுத்துள்ளார்கள். இவை குரு அனுக்கிரகத்தால் சித்தமாகும்போது இவ்வுன்னத நிலையை அடையலாம்.

இவற்றின் மூலம் பொய்மதத்தவரின் வாதங்கள் எப்படிப்பட்டவையென மனிதஇனம் நன்கு அறிந்து கொள்ள வேண்டியது முக்கியகடமையாகும். அவர்கள் மேற்கூறப்பட்டவற்றில் எந்தப்படியில் நிற்கின்றார்கள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு சொர்க்கலோகத்திற்கு மேல் தெரியாது. சொர்க்கலோகத்தை அடைவதற்குரிய மார்க்கங்களும் அவர்களுக்கில்லை. சில மதவாதிகள் பாரத தத்துவ சாஸ்திரங்களை வளைத்து ஒடித்து சொந்தமாக்க முயற்சிக்கின்றார்கள். அதுபோல் ஆதிகுரு அகஸ்தியர், திருவள்ளுவர், கோரக்கர் முதலிய மஹரிஷீஸ்வரர்களை தங்கள் மதத்தில் சேர்க்க முயற்சிகள் நடந்தவண்ணம் இருக்கின்றன. பாரத சொத்துக்களை அன்று அன்னியன் படையெடுத்து கொள்ளை கொண்டான். இன்று கபட வேஷம் பூண்டு ஆசைகாட்டி பறிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அய்யா வைகுண்டநாதர் உச்சிப்படிப்பின் மூலம் தெளிவாக்குவது யாதெனில், அண்டத்திலுள்ளவைகளெல்லாம் பிண்டத்திலும், பிண்டத்திலுள்ளவைகளெல்லாம் அண்டத்திலும் அடங்கி இருக்கின்றபடியால், அண்ட பிண்டம் இரண்டும் ஒன்றே. ஆதலால் அண்டத்தில் அலையாமல் பிண்டத்தில் நிலைத்து நில் என நிலைநாட்டுவதாகும். அது ''தல்துவம் அசி'' என்னும் மந்திரத்தால் கோர்த்திணைக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் பிரணவநாதமாகும். பிரணவம் நான்காக பகுக்கப்பட்டுள்ளது. அவை அகாரம், உகாரம், மகாரம் அர்த்தமாத்தரா (பரப்பிரம்மம்). அது பரிபூர்ண பரப்பிரம்மம் எனவும் கொள்க. சதாசிவனும் மனோன்மணியும் லயித்திருப்பது

பரப்பிரம்மத்திலாகும். இவற்றை அறிந்து அடையுங்கள். இதையே அய்யா வைகுண்டநாதர் ஐந்தாம் வேதமாக "உச்சிப்படிப்பு" மூலம் உபதேசிக்கின்றார்.

"ஓம்! சிவனே! பரம்பொருளே!"

அய்யா உண்டு.

இல்லறத்தை விட்டுத்தவம் இல்லைகாண் வேறுண்டோ"

- அகிலத்திரட்டு அம்மானை

"தரணியது அழிந்தாலும் சத்தியம் அழியாதப்பா"

- சிவகாண்ட அதிகாரப்பத்திரம்

"கலியென்றால் எலியல்லவே கணையாளி
வேண்டாமே
வலிமாய நினைவு மாய்மால மென்மகனே
ஆனதா லாயுதங்கள் அம்புதடி வேண்டாமே
மானமாக விருந்தால் மாளுங்கலி தன்னாலே'

- அகிலத்திரட்டு அம்மானை

"பொறுமை பெரிது புவியாள்வா யென்மகனே"

- அகிலத் திரட்டு அம்மானை

அனுபந்தம் - 1

அய்யா துணை

அய்யா வைகுண்டநாதர் அருள்மொழிகளும், அனுக்கிரகங்களும்

தொகுத்து அளித்தவர் - ப. சுந்தரம் சுவாமிகள்

அய்யா வைகுண்டநாதர் அருளிச்செய்ததும், அவருடைய அருள்மொழிக்குட்பட்டதுமான அருள்நூலில் உள்ள சிறந்த உபதேசங்களையும், அனுக்கிரகங்களையும் காண்போம். குறிப்பாக பத்திரம், சிவகாண்ட அதிகாரப்பத்திரம் என்னும் பகுதியில் உள்ளவற்றை பௌதீகமாக எடுத்துக் கொண்டால் 'அய்யா வைகுண்டநாதராகவும்', சரீரதத்துவமாக எடுத்துக் கொண்டால் 'பரமாத்வாகவும்' வாசகர்களாகிய முமூட்சுகளாகிய சான்றோர் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். பரமாத்மா என்பதை பரப்பிரம்மம் அல்லது பரம்பொருள் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

1) உன்னுடைய சரீரமாகின்ற தாளி ஓலையில் பிராணனென்னும் நாராயத்தால் சதாசமயமும் 'நான்' எழுதிக் கொண்டிருக்கின்றேன். அக்கவிதையின் எழுத்து நிற்கும் முன்பாக கவிஞனாகிய என்னையும், எழுத்தினையும் நீ அறி! அப்போது 'நீ' தன்னியனாவாய்! (பரிபூர்ணனாவாய்)

2) உன்னுடைய சரீரமாகின்ற கோயிலில் ஒரு கணக்கப்பிள்ளையை 'நான்' நியமித்திருக்கின்றேன். அந்தக் கணக்கப்பிள்ளை எல்லாவற்றையும் இயக்கிக் கொண்டிருக்கின்றார். அந்த போதசொரூபியை (அறிவு வடிவத்தை) நீ முறையாக அறிந்துகொள்! அப்போது 'நீ' தன்னியனாவாய்!

3) உன்னுடைய சரீரமாகின்ற கோயிலை ஆளுவதற்கு ஒரு மந்திரியை நியமித்துள்ளேன். என்னுடைய உத்தரவுப்படி அந்த மந்திரி நல்லாட்சி நடத்துவார். அந்த நல்லாட்சியினால் மக்கள் இரட்சிக்கப்படுவார்கள். அவ்வாறு ஆட்சிசெய்கின்ற மந்திரி

யாரென்பதை நீ உன்னில் அறிந்து கொள்! அப்போது 'நீ' தன்னியனாவாய்!

4) உன்னுடைய சரீரமாகின்ற மஹாக்ஷேத்திரத்தை ஆளுகின்ற மந்திரி பிராணனாகும். அந்த மந்திரிக்கு சகல அதிகாரங்களையும் வழங்கியிருக்கின்றேன். ஒரு கட்டம் தாண்டும்போது பிராணனாகின்ற மந்திரியின் பயணம் நிற்கும், அதற்கு முன்பு ராஜாவாகின்ற (பரமாத்மா) என்னையும், என்னுடைய பிரதிநிதியான மந்திரியையும் நீ உன்னில் அறிந்து கொள்! அப்போது 'நீ' தன்னியனாவாய்!

5) உன்னுடைய சரீரமாகின்ற மஹாக்ஷேத்திரத்தையும், குடியிருக்கின்ற பரம்பொருளாகிய என்னையும் நீ உள்ளதை உள்ளபடியே அறிந்துகொள்! அப்போது உன்னுடைய மனோமலினங்கள் (ஆணவங்கள்) நீங்கி 'நீ' தன்னியனாவாய்!

6)உன்னுடைய சரீரமான மஹாக்ஷேத்திரத்தையும், அந்த க்ஷேத்திரத்திற்கு உடையவனான என்னையும் நீ அறிந்து கொள்ளாவிட்டால், உன்னுடைய பிறப்பால் எவ்வித பயனுமில்லை. உன்னை நீ எப்போது அறிந்து கொள்கின்றாயோ அப்போது 'நீ' தன்னியனாவாய்!

7) உன்னுடைய சரீரமான மஹாக்ஷேத்திரத்தை நீ அறியும்போது, உன்னுடைய ஆதார தலைவனாகிய என்னையும் நீ அறிவாய். அப்போது 'நீ' தன்னியனாவாய்!

8)உன்னுடைய சரீரமான மஹாக்ஷேத்திரத்தில் உள்ள பஞ்சபூதங்களாகிய ''மண், நீர், அக்கினி, வாயு, ஆகாசம்'' இவற்றை முறையாக அறிந்து என்னை சரணடைந்தால் 'நீ' தன்னியனாவாய்!

9) உன்னுடைய சரீரமான மஹாக்ஷேத்திரத்தில் பஞ்சாட் சரத்தின் ஸ்தானம், உற்பத்தி முதல் லயம் வரை உள்ளவற்றை கண்டுணர்ந்து என்னில் லயமானால் 'நீ' தன்னியனாவாய்!

10) உன்னுடைய சரீரமாகின்ற மஹாக்ஷேத்திரத்தில் என்னை கண்டுணர்ந்து 'நீயும்' 'நானும்' ஏகமாக லயமாகிவிட்டால், இனி பிறப்பில்லாம் 'நீ' தன்னியனாவாய்.

11) உன்னுடைய சரீரமாகின்ற தேரை ஓட்டுகின்ற சாரதியையும், கடிவாளத்தையும், குதிரையையும் அவற்றிற் கெல்லாம் ஆதிகாரணனாகிய என்னையும் நீ அறி, 'நீ' தன்னியனாவாய்!

12) உன்னுடைய சரீரமாகின்ற தேர் ஒரு கட்டம் தாண்டும்போது முன்னோக்கி நகராது. அதற்கு முன்பாக என்னை அறிந்துணர்ந்து என்னில் லயமாகிவிடு! 'நீ' தன்னியனாவாய்!

13) உன்னுடைய சரீரமான மஹாக்ஷேத்திரத்தில் உள்ள கொடிமரத்தையும், கயிற்றையும், கொடியையும் அவற்றிற்கு அதிபதியாகிய என்னையும் அறிந்துணர்ந்து கொள், 'நீ' தன்னியனாவாய்!

14) உன்னுடைய சரீரமாகின்ற மஹாக்ஷேத்திரத்தில், கொடிமரத்தையும், பாசமாகின்ற பிராணனையும் (கயிறு) மனதாகின்ற கொடியையும், கொடிமரத்தை வலம் வருவதையும் நீ அறிந்துகொள். அப்போது உன்னில் பயணம் செய்து கொண்டிருக்கின்ற பிராணன் உத்தரித்து நொடியிடைபொழுது கொண்டு என்னில் லயமாகும். என்னில் நீ ஐக்கியமாகிவிட் டால் 'நீயே நான்' 'நானே நீ' இனி பிறப்பில்லாமல் 'நீ' தன்னியனாவாய்!

அய்யா வைகுண்டநாதர் ஒரே ஒரு பொருளை பதினான்கு வகையாக உபதேசித்து அனுக்கிரகிக்கின்றார். இதைப் படிப்பவர்களின் மனம் இந்த பதினான்கில் ஏதாவது ஒன்றில் பதிந்தால் போதும். அப்போது அந்தப் புண்ணியவான் பரிபூரணனாவான் (தன்னியனாவான்). முதன்முதலில் போதோதயம் சித்தமாகும். அதன்பின் க்ஷேத்திரத்தையும், கொடிமரத்தையும் சுற்றி வலம் வரவேண்டியதில்லை. கணக்கெழுத்தும், தேரோட்டமும் நிற்கும். எல்லாம் 'நான்' ஆவேன், அறிந்துணர்ந்து கொள், தன்னியனாகு!

அய்யா உண்டு

அனுபந்தம் 2

அய்யாதுணை

ஆர்ஷபாரதம்

ஆர்ஷபாரதம் பூலோகத்திலுள்ள மற்றநாடுகளைவிட அனுக்கிரகமும், புண்ணியமும் நிறைந்து விளங்கும் பூமியாகும். ஆத்மீகத்தின் உறைவிடம். இங்கு வாழ்வோர் தன்னியர். புண்ணிய ஆத்மாக்களின் நாடு தான் பாரதம். இங்கு அமைதி, தூய்மை, சாந்தகுணம், பகைவனுக்கு உதவும் பண்பு இவை ஒரு காலகட்டம்வரையிலும் நிரம்பியிருந்தது. இன்று மேற்கத்தியர்களின் வருகையால் இத்தன்மைகள் நிலை தடுமாறி நிற்கின்றன.

ஆரம்பகால ஆத்மீயத்தின் "ஹரிஶ்ரீ" மந்திரத்தை மனிதஇனம் உணர்ந்து கொள்ளக் செய்ததும் இந்த ஆர்ஷபாரதமே. பெருமையின் உடைமையாகத் திகழ்ந்த பாரதத்தை இன்று மேற்கத்தியர் வழிதவறச் செய்திருக்கின்றனர். பாரதீயர் தூங்குகின்றனர், விழித்தெழுங்கள்! நீங்கள் உயர்ந்தவர்களே! நீங்கள் பாவிகளல்ல. உங்களைக் கொச்சைப்படுத்தி பாவிகளாக்குவோரிடம் எச்சரிக்கையாக இருங்கள். அவர்கள் அந்தகாரத்தில் மூழ்கித் தத்தளிக்கின்றனர். பாரதமக்களாகிய நீங்களும் அவர்களைப் போல் ஆக வேண்டாம்.

பூஉலக வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் பாரதநாட்டு மகத்துக்களல்லாமல் வேறுநாட்டிலுள்ள யாருமே ரட்சிக்கப்பட்டவர்களாக காணமுடியாது. இன்று எங்கு பார்த்தாலும் (பாரதத்தின் முன்கால வரலாற்றை ஆராய்ந்தால்) பிருதிவிராஜனை கொலைசெய்யக்காட்டிக் கொடுத்த ஜெயச்சந்திரர்களும், கட்டபொம்மனை காட்டிக்கொடுத்த எட்டப்பர்களும் பெருகிவருகின்றனர். சன்னியாச வேஷதாரிகள் வழிதவறி அழிந்து கொண்டிருக்கின்றனர். நிஷ்காமகர்மம் (தூய்மையான செயல்) அனுஷ்டிக்க வேண்டிய சன்னியாசிகள் ஆசிரமங்கள் அமைத்து மனிதர்களை கொள்ளையடிக்கின்றனர். பாரதத்திலுள்ள மதஸ்தாபனங்கள் பலதும் வியாபார இடங்களாக

மாறியுள்ளன. பாரதமக்களாகிய நீங்கள் இதை அறிந்துணராவிட்டால் பிரகிருதிமாதா உங்களைத் தண்டிப்பார். இது சத்தியம்.

இந்த ஆபத்தான காலகட்டத்தில் அய்யா வைகுண்டநாதரின் அருள்மொழிகளும், அனுக்கிரகங்களும், உபதேசங்களும் உறுதுணையாக இருக்கும் என்பதை உணர்ந்து செயல்படுங்கள். இதுவல்லாமல் இன்னொரு மார்க்கம் காணப்படவில்லை. உலகம் இன்று அழிவின் எல்லையில் இருக்கின்றது. ஆர்ஷபாரத கோட்பாடுகளை அயல்நாட்டார் உடைத்தெறிந்து விட்டனர். எஞ்சிய பகுதியையாவது காப்பதற்கு ஒன்றுபடுவோம்.

அய்யா வைகுண்டநாதருடைய அவதார நோக்கம் கலியை அழித்து தர்மயுகம் படைத்து, தர்மபதி காண்பதாகும். அதற்குரிய காலம் வந்துவிட்டது. ஆர்ஷபாரதத்தவரே! விழித்தெழுங்கள்! உணருங்கள்! ஒன்றுபடுங்கள்! தன்னியராகுங்கள்!

அய்யா உண்டு

கருத்துரையாளர்.

"விளக்கொளி போலே வீரத்தன மாயிருங்கோ"

- அகிலத்திரட்டு அம்மானை

"அண்ட பகிரண்டம் வெல்லவொரு ஆயுதம் வந்திருக்குதப்பா"

- சிவகாண்ட அதிகாரப்பத்திரம்

"காடு நாடாகுமென்று நாரணன் சொன்னசொல்
காலமும் சரியாச்சே சிவனே அய்யா!"

- சாட்டு நீட்டோலை

அனுபந்தம் 3

அய்யா துணை

இன்றைய உலகம்

இன்றைய உலகில் இந்து மதம், புத்த மதம், ஜைன மதம், யூத மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம், சீக்கிய மதம், முதலிய முந்நூறுக்கும் மேற்பட்ட மதங்களும், அவற்றின் உப மதங்களும் மனிதகுலத்தை வழிநடத்திச் செல்கின்றன. இம்மதங்களில் கிறிஸ்தவ மதத்திற்கு ஆயிரக்கணக்கான பிரிவுகள் இருப்பதாகக் காண்கிறோம். மதங்களால் மனித இனத்திற்கு, ஆத்மீக பரமாக ஒரு நன்மையும் இதுவரை கிடைக்கவில்லை என்பதே சத்தியம். பல மதங்களும் உலகியலுக்கு பொருந்தாத கட்டுக்கதைகளால் உருவாக்கப்பட்டவை என்பதை உணர்ந்து கொள்ள முடியும். ஒரு காலகட்டம் வரையிலும் இப்பூவுலகில் ''சனாதனதருமம்'' நிலைத்திருந்தது. பிற்காலத்தில் தோன்றிய மதங்கள்தான் மனிதகுலத்தை அழித்துக் கொண்டிருக்கின்றன. ''சத்தியம்'' என்றால் என்ன என்பதை ஒவ்வொரு மனிதனும் புரிந்து கொள்ள வேண்டிய காலம் நெருங்கி விட்டது.

மதவாதிகள், தெய்வம் ஒன்றே எனக்கூறுவதும், தெய்வத்தைப் பற்றியும், தெய்வ மகிமையைப் பற்றியும், வெவ்வேறாகவும், தவறாகவும் வியாக்கியானிப்பதும் அவர்கள் தொழிலாகிவிட்டது. அவ்வாறு விளக்கமளிப்போர் உண்மைக் கடவுளை அறியவுமில்லை, அறிய முற்படுவதுமில்லை. எனவே இச்சமயவாதிகள் அனுபவமில்லாமல் புலம்புகின்றனர் என்றுதான் கூறவேண்டியுள்ளது. தெய்வநிலையை அறிவதற்கு எண்ணமுடையவர்கள் முயற்சிப்பதுமில்லை, பிறரை அனுமதிப்பதுமில்லை. அனுபவமில்லாமல் நடத்துகின்ற சபைகளும், அவர்கள் எழுதுகின்ற புத்தகங்களும் மனிதகுலத்தை படுபாதாளத்தில் தள்ளிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு மனிதனின் கட்டுப்பாடில்லாத போக்கு அழிவை விதைக்கின்றது. எல்லா மதங்களும் உலக சமாதானத்தைக் குறித்துக் கனவுகாண்கின்றன. உலகில் எந்த மூலையிலாவது இக்கனவுகள்

நிஜமானதாக ஆதாரமில்லை. மாறாக பூலோகம் முழுதும் அமைதிக்குறைவும், நிம்மதிக் குறைவும், கொலை, கொள்ளை, தீவிரவாதங்களுமே தலைவிரித்தாடுகின்றன. இவற்றிலிருந் தெல்லாம் மனிதகுலம் விடுபட்டு, அமைதிபெற்று, ஆத்மீக உணர்வு பெற்று நல்வாழ்வு வாழ அய்யா வைகுண்டநாதர் அருளிச் செய்த ''அருள்நூல்'' ''அகிலத்திரட்டு அம்மானை''ஆகிய ஞான நூல்கள் வழிகாட்டியாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

பறவைகள், மிருகங்கள் போன்றவற்றின் விவேகம் கூட மனிதனுக்கில்லை எனக் கூறலாம். அவற்றிற்கு கிருத்திய நிஷ்டை உண்டு. (கடமை உணர்வு) பிரகிருதி நியமம் தவறுவதில்லை. அவை சாயங்காலத்திற்கு முன் அவற்றின் கூடுகளில் வந்து சேர்ந்துவிடுகின்றன. மனிதன் இதை கூட கடைபிடிக்கவில்லை. இனவிருத்திக்காக ஒரு தடவை அவை புணர்ந்தால் பிறகு அடுத்த கட்டம் வரும்வரையிலும் காத்திருக்கும். அது வரையிலும் அவற்றிற்கு ஒரு மோகமும் உண்டாவதில்லை. மிருகங்களின் விவேகம் கூட மனிதனுக்கு இல்லை என்பது தெளிவாகின்றதன்றோ? மனிதனுடைய உலகியல் வாழ்க்கை கட்டுப்பாடற்றதும், சீரழிந்ததும், இயற்கைக்கு மாறானதுமாகும். அதனாலேயே மாட்டை விட, மனிதன் அவிவேகி எனக் கூறுகின்றனர்.

இன்று உலகில் எந்த மூலை முடுக்குகளில் ஆனாலும் சரி பௌதீக நிலையில் விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கின்ற காரியங்கள் அனைத்தும், பல யுகங்களுக்கு முன்பே ஆர்ஷபாரதத்தில் யோகீஸ்வரர்கள் தீர்க்கதரிசனங்கள் மூலம் கண்டறிந்தவைகளாகும். அதற்கு ஆதாரங்கள் வேதங்களும் சித்தாதிபாடல்களும் ஆதிகுரு அகஸ்தியர், பூசுண்டர், வசிஸ்டர், திருமூலர், கோரக்கர் ஆகியோரின் அருள்மொழிகளும், மஹாபாரதம், ராமாயணம், பாகவதம், உபநிஷத் போன்றவைகளுமாகும். இவைகளே சத்தியம். ஒவ்வொரு மனிதராசியும் இதை அறிந்துணர்ந்து கொள்ளுங்கள்.

ஆர்ஷபாரதத்தில் பாச்சாத்தியர்கள் (மேற்கத்தியர்கள்) வருகைக்கு முன்பு வரையிலும், மக்கள் பிரகிருதி நியமங்களை

மேற்கொண்டிருந்தார்கள். அவர்களின் வரவால் அனைத்தும் தலைகீழாக மாறி சின்னாபின்னமாகிவிட்டன. இதனையே அய்யா வைகுண்டநாதர் அகிலத்திரட்டு அம்மானையில்

"விருச்சமுள்ள நீசன் வேசை நசு றாணியவன்
வையகங்க ளெல்லாம் வரம்பழித்து மாநீசன்
நெய்யதிய சான்றோர்கள் நெறியெல்லாம் தாம்குலைத்துப்
பேரழித்துத் தானம் பூப்பியமுந் தானழித்து"

என அருளியுள்ளார்.

ஆர்ஷபாரதத்தில், பாச்சாத்தியர்கள் வந்து சாதுக்களை மதம்மாற்றி பாவிகளாக்கியது மட்டுமின்றி, பறங்கிப்புண் (குணேரியா - சிபிலிஸ்) புகைப்பழக்கம், கொடிய போதைப்பொருட்கள், தீராத எய்ட்ஸ் போன்ற மாபாதகங்களை, பாரதீயர்க்கு சிறந்த செல்வங்களாக வழங்கியுள்ளனர். இனி ஓர் அழிவின் மூலம்தான் சாந்தி ஏற்படும். அதற்குரிய காலம் நெருங்கி விட்டது.

அய்யா வைகுண்டநாதர் சிவகாண்ட அதிகாரப்பத்திரத்தில் அருளியுள்ள அழிவின் தன்மையைப் பார்ப்போம்.

"பெருங்காற்றினால் அழிவு
வெள்ளத்தால் அழிவு
பேய் மாறாட்டத்தால் அழிவு
பெருஞ்சுரத்தால் அழிவு
சம்மாரியால் அழிவு
காளி வெள்ளத்தால் அழிவு
நஞ்சுதின்று கொலைப்பட்டழிவு
பெண்ணாலே ஆண் அழிவு
ஆணாலே பெண் அழிவு

பூமி அதிரும் ஒசையினால் ஒரு பெருமூச்சு உண்டாகும் வறுமையது தான் பெருத்து நீங்கள் வழித்தப்பி போவீர்களே கண்டதுண்ட மாகவல்லோ கனத்தபூமி வெடிக்குதடா"

என்றும்,

திங்கள் பதத்தில்

"வள்ளியாற் றுக்குமேற்கு வாரியால் தானழியும்
கோட்டாறு அங்கே கொள்ளையி னாலழிப்போம்
சுசீந்திரம் ஆறுடைத்து சுத்தகதி ஆகுதங்கே ஆறுடைத்துத்-
தேரும் அன்புடனே தெற்கேவர
தாமரை குளம்பதியும் தண்ணீராய்ப் போகுமங்கே"

என்றும் அழிவின் தன்மையை சுட்டிக்காட்டுவதோடு,

யார் இந்த அமைதிகுலைந்த இன்றைய உலகிலிருந்து சாந்தியடைவார் என்பதையும் திங்கள்பதத்தில் அய்யா அருளியுள்ளார்.

"நட்சத் திரமுதிரும் நல்வான மிடிந்துவிழும்
என்னையறி யாதபேர்கள் எரிந்து சரிந்து போவார்"

எனவே இன்றைய உலகத்தோரே அய்யா வைகுண்டநாதரின் அருளுரைகளை அறிந்து, உணர்ந்து, விழித்தெழுந்து, ஒன்றுபட்டு, ஒரு நினைவால் வாழ்ந்து, 'அமைதியான, ஆரோக்கியமான, ஆனந்தமான,' வாழ்வை அமைத்து, தர்மயுகம் படைத்து, தர்மபதி காண்போம்.

அய்யா உண்டு.

கருத்துரையாளர்

"பூமி வெடிக்கிறதே மலைகள் இளகுதடா
சுழற்காற்று வருகுதப்பா தேசமிட்டு ஜனம் ஓடுதடா"

- திங்கள் பதம்

"வான முறுமும் மழைகீழ்ச் சொரியாது
தான மழியும் சாஸ்திரங்கள் பொய்யாகும்"

- அகிலத்திரட்டு அம்மானை

"ஈக்கள் பெருகும் எறும்பு மிகப்பெருகும்
காய்தல் பெருகும் கஞ்சா அபின் பெருகும்
சன்னாசி நிஷ்டை தவறி யலைவார்கள்"

- அகிலத்திரட்டு அம்மானை

அனுபந்தம் 4

அய்யாதுணை

மருந்துவாழ்மலை

கிரேதாயுகம் முதற்கொண்டு ஆத்மீக வளம் பெற்று விளங்கும் புண்ணிய மலையே, ''மருந்துவாழ்லை''. இது பிற்காலத்தில் 'மருத்துவாமலை' என மருவி வழங்கப்படுகின்றது. இம்மலை சுமார் 1800 உடி உயரமும், 625 ஏக்கர் பரப்பளவும் கொண்டது. மருந்துவாழ்மலை பல மஹரிஷீஸ்வரர்கள் தவம் புரிந்த புண்ணியமலையாகும். சங்கல்ப்பங்களும், விசுவாசங்களும் எவ்வாறு இருப்பினும், இம்மலைக்கு பூமி சாஸ்த்திரவகையாலும், சரித்திர வகையாலும் தனிப் பெருமையுண்டு.

மருந்துவாழ்மலை மேற்கு தொடர்ச்சி மலையின் முடிவு பகுதியாக தனித்துவம் பெற்று விளங்குகின்றது. இந்து மகா சமுத்திரம், வங்காள விரிகுடாக் கடல், அரபிக்கடல் ஆகிய மூன்றும் சங்கமிக்கின்றதும், இப்பாரதபூமியின் ஆன்மீக கன்னித்தன்மை அகிலமெங்கும் ஒளிவீச கன்னிபகவதியம்மை தவம் செய்து கொண்டிருக்கின்றதும், தட்சணாபூமியுமான கன்னியாகுமரிக்கும் வடமேற்கில் அமைந்துள்ளதே ''மருந்துவாழ்மலை''. முக்கடலில் இருந்து எழும் 'அரகரா' என்ற ''அரிநாம'' அலை ஒலியும் மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியாகி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் சுசீந்திரம் தாணுமாலயன் கோயிலில் இருந்தும், முப்பொருளும் ஒரு பொருளாகி ஜீவசமாதியிருக்கும் சுவாமித்தோப்பு அய்யா வைகுண்டநாதர் பதியில் இருந்தும் எழும் ''சிவசிவா'' என்ற ஜீவ ஒலியும் மருந்துவாழ்மலையை தழுவிச் செல்வது பரம்பொருளின் தனிக்கருணையாகும். இவ்விரு மந்திரஒலிகளும் இம்மலையை தழுவிச் செல்வதாலும், ஆதிகுரு அகஸ்தியர், அத்திரி மஹரிஷி

மற்றும் இவர்களுடைய சீடர்களும், அய்யா வைகுண்டநாதரும் இம்மலையில் தவம் செய்ததாலும்

"வருடியிருப்பதாலே மருந்துவாழ்மலையில்
மருந்து வளரலாச்சே சிவனே அய்யா!"

என சாட்டு நீட்டோலையில் அய்யா அருளியுள்ளார்.

மருந்துவாழ்மலை உச்சியிலிருந்து நாம் காணும் சூரிய, சந்திர இயக்கமானது, இம்மலையில் தவம் இருப்பவர்களை காத்து இரட்சிக்கும் கருணைக் காட்சியாகவே இருக்கின்றது. இவ்வாறான ஆன்மீக வளம் பொருந்திய மலையை உலகில் வேறெங்கும் காண்பது அரிது.

ஆதிகுரு அகஸ்தியர், அத்திரி மஹறிஷி பரமார்த்தலிங்கேஸ்வரர் இன்னும் பல தவமுனிவர்களும், திரேதாயுகம் முதற்கொண்டு, இப்புண்ணியமலையில் தங்கள் பாதமலர் பதித்து தவம்செய்த புண்ணியத்தாலே, அவர்கள் தவம் மேற்கொண்ட இடம் **"பிள்ளைத்தடம்"** என்று அழைக்கப்படுகின்றது. பிள்ளைத்தடமானது மலை உச்சியிலிருந்து, கீழ்நோக்கிச் செல்லும் குகையாகும். இது தத்துவார்த்தரீதியானதாகும். ஆதிபரன் சித்துவித்தையின் மூலாதாரமே **"பிள்ளைத்தடம்"**. பிள்ளைத்தடத்திலுள்ள மணலை கையால் நிரப்பாக்கி, தியானத்தில் இருந்துகொண்டு, மணலை உற்றுப்பார்த்தால் சில உருவங்கள் தெரிகின்றன.

"மருந்துவாழ் மலையென்று மயங்குகிறாரென் மக்களெல்லாம்
மேலுங் கீழுந் தெரியாது நான் மெய்யன் மகன் பொய்யனப்பா"

எனும் அய்யாவின் சிவகாண்ட அதிகார பத்திர வரிகளை உணரும்போதே, மருந்துவாழ் மலையின் மகத்துவத்தை நாம்உணர முடியும்.

அரிய மூலிகைகள் பல உள்ள மருந்துவாழ் மலையில் **"அகஸ்தியர் பூரண சூத்திரம் 216"** ல் தெளிவுபடுத்தப்பட்டுள்ள

''பனங்குலை பாஷாணம்'' எனும் முக்கிய மருந்தும், இதர பல முக்கிய மருந்துகளும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. கோடைகாலத்திலும் நீர் வற்றாத 'பாலாறு ஓடை' 'ஆகாசகங்கை' 'கங்காதீர்த்தம்' எனும் நாமங்களால் அழைக்கப்படும் ''அமிர்தபாணியும்' இம்மலையில் உள்ளது. மலையின் தியான மண்டபத்தின் கிழக்குபுறம் 'கன்னிமார்சுனை'யும், வடகிழக்கில் 'தேவேந்திரன் சுனை'யும் உள்ளது. தவிரவும் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும் வகையில் சிலகிணறுகளும், மலையடிவாரத்தின் தென்பகுதியில் அழகான ஒரு குளமும் உள்ளது.

மருந்துவாழ்மலையில் ஏறும்பகுதியில் ஸ்ரீகணபதி, சாஸ்தா, சிவலிங்கம், காளி, முருகன், ஆஞ்சநேயர், நாகம், கண்ணன் ஆகிய சிலைகள் அமைந்துள்ள ஒர் கோயில் உள்ளது. அதன்மேல் பகுதியில் ஆசாரி மண்டபம் உள்ளது. இதன்மேல்பகுதயில் கல்வெட்டு படிகளைக் கடந்து, பரமார்த்தலிங்கேஸ்வரர் சிவன்கோயில் உள்ளது. இக்கோயில் வரலாற்றை பத்பநாபபுரம் கோட்டையிலுள்ள செப்புபட்டயம் மூலம் அறிந்துகொள்ளலாம். சிவன் கோயிலின் மேல்பகுதியில் கிழக்குப்புறமாக தியானமண்டபம் உள்ளது. தியான மண்டபத்தின் மேல்பகுதியில் பாலாறு ஒடை போகும் வழியில் விராலிகுகை உள்ளது. மருந்துவாழ்மலையின் உச்சியில் பிள்ளைத்தடமும் அதன் கிழக்கு, வடக்கு உயர்ந்தபகுதியில் இந்துக்கள் கார்த்திகை தீபம் எற்றி வழிபடும் இடமும் உள்ளது. இவை தவிர முனிவர்கள் தவம் செய்த குகைகள் சில ஆங்காங்கே உள்ளன.

மருந்துவாழ்மலை சிவன்கோயில் மூலஸ்தானத்தின் பின்புறம், முனிவர்கள் தவம் செய்த அழகிய குகை ஒன்று உள்ளது. அதில் அங்கு தவம் செய்த முனிவர்கள் பயன்படுத்திய 'யோகத்தண்டு' ஒன்று இன்றும் உள்ளது. இக்கோயிலின் மேல்பகுதியில் ஆலும், நாவலும் இணைந்து ஒரே மரமாக நிற்பதைக் காணலாம். சிவன்கோயிலின் முற்பகுதியில் வைத்துதான் அய்யா வைகுண்டநாதருக்கு ஆலகாலவிடம் கலந்த உணவு

கொடுக்கப்பட்டது. இது கொல்லம் ஆண்டு 1000த்தில், 16வது வயதில். அஷ்டாங்கயோகம் முடித்து உடம்பு 'சிவலிங்க'மான அய்யாவை விஷம் ஒன்றும் செய்யவில்லை. இதைத்தான் **"மருந்துவாழ் மாமுனிவன் மாயசாலக்காரனும் நான்"** என சிவகாண்டபத்திரத்தில் அய்யா அருளியுள்ளார்.

அய்யா வைகுண்டநாதர் தீர்க்கதரிசனம் மூலம், மருந்துவாழ்மலையின் அடிவாரத்தில் ஓர் உத்தம சன்னியாசியின் சமாதியினைக் கண்டு அதில் **'வைகுண்டபதி'**யை ஸ்தாபித்தார்

"வைகுண்டபதியிலே கைகண்ட வேதாவைப்போல்
வாழவும் பாவித்தாயே சிவனே அய்யா!"

எனும் சாட்டு நீட்டோலை வரிகள் இதனை உணர்த்துகின்றன. இவ்வைகுண்டபதியில் தான் 'நாயினார் சுவாமிகள்' வெகுகாலம் தங்கியிருந்தார். 1980ம் வருடம் மஹாசமாதியடைந்தபின், நாயினார் சுவாமியின் சமாதியும், அதன்மேல் சமாதி மண்டபமும், 'அருள்வள்ளல்' ராஜமாணிக்கம் நாடார் அவர்களால் கட்டி சிறப்பிக்கப்பட்டுள்ளது.

"வடக்கு வெளிவாசல் மலைமீதி லொருபுதுமை
உண்டாகு மென்மகனே உனக்கு நற்காலமதே" எனும் அகிலத்திரட்டு அம்மானை வரிகள், மருந்துவாழ்மலையில் அய்யாவின் அருளால் உருவாகியுள்ள **'அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரமத்தை'** குறிப்பிடுவதாகவும்

"மலையடி வாரம் வளருமொரு விருச்சம்
அலையிலும் பெரியதாய் அது தழையுங்கண்டாயே"

எனும் அகிலத்திரட்டு அம்மானை வரிகள், ஆஸ்ரமத்தின் வளர்ச்சியை குறிப்பிடுவதாகவும் உணருகின்றோம்.

அறுவடை காலங்களிலும் இதர முக்கிய பண்டிகை காலங்களிலும் இந்துக்களாகிய பெண்களும், ஆண்களும் கூட்டம் கூட்டமாக இம்மலையில் வந்து சமையல் செய்து சந்தோசமாக சாப்பிட்டுச் செல்கின்றனர். இம்மலையிலுள்ள சிவன்கோயிலும், தியானமண்டபமும், ஆசாரி மண்டபமும் கன்னியாகுமரி மாவட்ட தேவசம்போர்டு பொறுப்பிலுள்ளது.

மருந்துவாழ் மலையின் அடிவாரத்தில் பிரம்மஸ்ரீ சட்டாம்பி சுவாமிகளின் நினைவாக தீர்த்தகிரி ஆஸ்ரமமும், நாராயணகுருவின் நினைவாக ஒரு ஆஸ்ரமமும், மருந்துவாழ்மலை அகில உலக சான்றோர் சங்கமும் இயங்கி வருகின்றன.

மருந்துவாழ்மலை சரீரத்துடன் பந்தப்பட்டதுமாகும். திரேதாயுகத்தில் ஸ்ரீராமனும், வானரப்படைகளும் மருந்துவாழ்மலைக்கு வந்துள்ளார்கள். ராவணவத சமயம் பகவான் அகஸ்தியர் ஸ்ரீராமனுக்கு "ஆதித்திய ஹிருதய மந்திரம்" உபதேசித்தது, அகஸ்தியர் இம்மலையில் தவம் இருந்த காலகட்டத்திலாகும்.

ஆதிகுரு அகஸ்தியர் பாண்டிய மன்னர்களின் குலகுருவாகவும் இருந்துள்ளார். அகஸ்திய முனிவருக்கும், மருந்துவாழ் மலைக்கும், இப்பகுதிக்கும் உள்ள தொடர்பினாலேயே அகஸ்தீஸ்வரம் கிராமமும், தாலுகாவும் உருவாகியுள்ளது. வடுகன்பற்றில் அமைந்துள்ள புராதன அகஸ்தியர் கோயிலும் இதற்கு சான்றாகும். பகவான் அகஸ்தியர் மருந்துவாழ்மலையிலிருந்து பொதிகைமலை சென்று அங்கு கூடம் ஒன்று அமைத்து தவம் செய்தார். இன்றும் அது அகஸ்தியர் கூடம் என்று அழைக்கப் பட்டு வருகின்றது.

மருந்துவாழ்மலையில் தவம்செய்து வந்த அத்திரி மகரிஷி, சுசீந்திரத்தில் மஹாசமாதியடைந்தார். இப்பகுதியில்தான் தாணுமாலயன் கோயில் உள்ளது. இவ்விதடத்திற்கு ஞானாரண்யம் என்ற பெயரும் உண்டு. கொன்னயடி அம்மையின் (அனுசூயாதேவி) முன்பு, மும்மூர்த்திகளும் குழந்தைவடிவம் பெற்ற இடமும் இக்கோயிலின் உள்தான் இருக்கின்றது.

மருந்துவாழ்மலை ஆன்மீக பாரதத்தின் புண்ணிய சொத்து என்பதை உணருவோம்!

அய்யா உண்டு

P. சுந்தரம் சுவாமிகள்,
K. பொன்னுமணி.

மருந்துவாழ்மலை.

அய்யா துணை

அன்புநிறை சகோதரி, சகோதரர்களுக்கு,

அய்யா வைகுண்டநாதருடைய அருள்மொழி, அய்யாவைப் பற்றி அறிந்தவை, அய்யாவைப் பற்றிய உங்கள் கருத்து, எதுவாயினும் தாங்களுக்கு தெரிந்தவற்றை அருள்கூர்ந்து தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

"அறிந்தோர் அறிந்திடுங்கோ அறிவுள்ளோர் கேட்டிடுங்கோ
தெரிந்தோர் தெரிந்திடுங்கோ உங்கள் சித்தம்பல தாண்டவரை"

- சிவகாண்ட அதிகாரப்பத்திரம்

"பூலோகம் உள்ளளவும் பொய்யருகி மெய்வாழ
நல்லோரும் வாழ நவில்வோரும் தான்வாழ
எல்லோரும் வாழ யிருந்து நீடூழி வாழ' '

- திருமணவாழ்த்து

அய்யா உண்டு.

மாசி 29-1172 அய்யா வைகுண்டநாதர் சித்த ஆஸ்ரமம்,
12-03-1997 மருந்துவாழ்மலை.